பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்:17 வள்ளுவர் ஆண்டு 2033 தை 10 புதன்கிழமை (23-01-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:59

## சர்வதேச நிலைப்பாட்டை அனுசரித்து

# புலிகள் மீதான தடை உத்தரவில் திருத்தம் செய்ய பிரதமர் யோசனை

## நிலைமையை விளக்கி நாடாளுமன்றில் உரை



கொழும்பு,ஜனவரி23

**தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் மீது உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை முற்றாக நீக்குவதற்குப் பதிலாக முதலில் அந்தத் தடை உத்தரவின் பிரமாணங்களில் திருத்தங்களைச் செய்யலாம்.**

**சர்வதேச நாடுகளின் கருத்துக்களுடன் முரண்படாமல் அவற்றைப் பேணிப் பாதுகாத்துக் கொண்டு சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுக்க இதுவே எம்மிடம் இருக்கும் மாற்றுவழியாகும்.**

**இவ்வாறு ஆலோசனை வெளியிட்டிருக்கிறார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.**

நாடாளுமன்றத்தில் நேற்று ஆற்றிய நீண்ட கொள்கை விளக்க உரையின்போதே பிரதமர் இதனைத் தெரிவித்தார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தனது உரையில் தெரிவித்ததாவது:-

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதில் முக்கிய பிரச்சினையாகக் காணப்படுவது, விடுதலைப் புலிகள் மீது உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் விதிக்கப்பட்டிருக்கும் தடை ஆகும். பேச்சுக்களை ஆரம்பிக்க வேண்டுமானால் உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடை நீக்கப்பட வேண்டும் என்று விடுதலைப் புலிகள் அமைப்பு அறிவித்துள்ளது. மறுபுறத்தில் அரசியல் தீர்வு காண்பதற்காக

(14ஆம் பக்கம் பார்க்க)

# இருதரப்பு யுத்தநிறுத்த உடன்பாடு நோர்வே விரைவில் தயாரிக்கும்

## நேற்று பாலசிங்கத்துடன் விரிவான பேச்சு

லண்டன்,ஜன.23

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இருதரப்பு யுத்தநிறுத்தத்தை உள்ளடக்கிய புரிந்துணர்வு உடன்பாடு ஒன்றை ஏற்படுத்தும் முயற்சியில் ஈடுபட்டிருக்கும் நோர்வேக் குழுவினர் நேற்று லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கத்துடன் மற்றொரு சுற்றுப் பேச்சு நடத்தினர்.

நேற்றுக்காலை அன்ரன் பாலசிங்கத்தின் இல்லத்தில் சுமார் மூன்று மணி நேரம் இப்பேச்சுக்கள் நீடித்தன.

இருதரப்பு யுத்தநிறுத்த உடன்பாடு தொடர்பாக கொழும்பில் அரசுத்தரப்பு முன்வைத்த யோசனைகளை இந்தச் சந்திப்பின் போது நோர்வேக் குழுவினர் அன்ரன் பாலசிங்கத்திடம் விளக்கியதாகவும் அவரிடம் இருந்து புலிகள் தரப்பு யோசனைகளைப் பெற்றுக்கொண்டதாகவும் தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

யுத்தநிறுத்த உடன்படிக்கையில் இடம்பெறவேண்டிய அம்சங்கள் தொடர்பாக நோர்வேக் குழுவினர் அடுத்தவாரம் அந்நாட்டின் வெளிவிவகார பிரதி அமைச்சர் சகிதம் மீண்டும் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவர் என எதிர்பார்க்கப்படுவதாகவும் -

அதன் பின்னர் நோர்வேக் குழுவினர் கொழும்பு சென்று அரசுப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடுவர் எனவும் - தகவலறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்தப் பேச்சுக்களின் முடிவில் இரு தரப்புகளின் யுத்தநிறுத்த உடன்பாடு இறுதி வடிவம் பெற்றுவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.(ஐ-3-6)

## வடக்கில் உள்ளூராட்சித் தேர்தலை ஒத்திவைக்க அரசு முடிவு?

கொழும்பு.ஜன.23

வடக்கில் உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தலை ஒத்திவைக்க அரசு முடிவு செய்துள்ளதாக நம்பிக்கையான வட்டாரங்கள் தகவல் வெளியிட்டது.

இந்த ஒத்திவைப்புத் தொடர்பான அரசின் உத்தியோகபூர்வ அறிவித்தல் ஓரிரு தினங்களில் வெளியாகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்க்கட்சிக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடன் உத்தியோகப்பற்றற்ற முறையில் கலந்துரையாடிய சமயம் பிரதமர் இத்தகவலை அவரிடம் சூசகமாகத் தெரிவித்தார். என்று கூறப்படுகிறது.

கிழக்கில் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாக அரசுத்தலைவர்கள், அரசில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்கள் ஆகியோருடன் பிரதமர் கலந்துரையாடி வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

தமிழ்க்கட்சிகளின் கூட்டமைப்பின் பிரதிநிதிகள் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர்களுடன் நேற்று கலந்துரையாடினர்.

கிழக்கில் தேர்தலை ஒத்திவைப்பது தொடர்பாகவே இந்தக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

(ஐ-3)

## போக்குவரத்து கட்டுப்பாடு நீக்கம்!

கொழும்பு,ஜன.23

திருகோணமலை - கண்டி வீதி 24 மணி நேரமும் பொதுமக்களின் போக்குவரத்துக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

அரசபடைகளும், விடுதலைப் புலிகளும் போர்நிறுத்தம் அறிவித்துள்ளதைத் தொடர்ந்தே இந்தப் பாதை திறந்துவிடப்பட்டுள்ளது.

கடந்த 10 வருடகாலமாக இந்தப் பாதையூடான போக்குவரத்தைப் படையினர் மட்டுப்படுத்தி வைத்திருந்தனர். இந்தப் பாதையூடாக பொதுமக்கள் காலை 7 மணி தொடக்கம் இரவு 10 மணிவரையுமே பயணம் செய்ய அனுமதிக்கப்பட்டுவந்தனர்.

தற்போது 24 மணிநேரமும் பாதை திறந்து விடப்பட்டுள்ளதைத் தொடர்ந்து கொழும்பில் இருந்து இரவு நேர பஸ் சேவைகளும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ-6-ரி)

## மட்டுநகர் சென்ற 2 புலிகள் கைதாகிப் பின்னர் விடுவிப்பு!

மட்டக்களப்பு,ஜன.23

மட்டக்களப்பு நகரில் உள்ள கராஜ் ஒன்றில் தமது மோட்டார் சைக்கிளைத் திருத்துவதற்காகச் சென்ற விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் இருவரைப் பொலீஸார் கைது செய்து பத்து மணி நேரம் தடுத்து வைத்தனர்.

இச்சம்பவம் கடந்த ஞாயிறன்று இடம்பெற்றது.

கைதான இருவரிடமும் மைக்ரோ பிஸ்ரல், சயனைட் வில்லைகள் என்பன இருந்ததை அடுத்து இருவரையும் பொலீஸார் தடுத்து வைத்தனர் என்றும் தகவல் திணைக்களம் தெரிவித்தது.

சாதாரண குற்றவியல் சட்டத்தின் கீழ் ஆயுதங்கள் வைத்திருந்த குற்றத்தின் பேரில் வழக்குத் தாக்கல் செய்யப் போவதாக பொலீஸார் அவர்களிடம் தெரிவித்ததாகவும் -

அப்போது அவர்கள் இருவரும் தம்வசம் இருந்த சயனைட் வில்லைகளை உட்கொண்டு தற்கொலை செய்யப்போவதாக எச்சரித்ததாகவும் - கூறப்படுகிறது.

இருதரப்புக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்டதை அடுத்து 10 மணி நேரம் தடுத்து வைக்கப்பட்ட பின்னர் இருவரையும் அழைத்துச் சென்ற பொலீஸார் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் அவர்களை விடுவித்தனர்.

(ஐ-3)

## முல்லைத்தீவுக் கடலில்

## படகு அணியின் மீது எச்சரிக்கை வேட்டு!

கொழும்பு,ஜன.23

முல்லைத்தீவு கடற்பகுதியில் கடந்த ஞாயிறு இரவு அடையாளம் தெரியாத படகுக் கூட்டம் ஒன்றின் மீது கடற்படைப் படகுகளில் இருந்து எச்சரிக்கை வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ரோந்து சென்ற கடற்படையினர் ஒன்பது படகுகள் கொண்ட படகு அணியைக் கண்டு சந்தேகம் கொண்டு அதை வழிமறித்தனர் என்றும் -

அவை நிற்காமல் சென்றதையடுத்து அவற்றின்மீது எச்சரிகை வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் -

பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

அந்தப் படகுகளை அடையாளம் காண்பதற்காகக் கடற்படையினர் முதலில் சர்வதேச சமிக்ஞை முறை மூலம் வானொலியில் தொடர்பு கொண்டனர் என்றும் -

ஆனால் பதில் சமிக்ஞை ஏதும் கிடைக்காததையடுத்து கடற்படையினர் சுயபாதுகாப்புக்காக எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர் என்றும் -

அதனையடுத்து அந்தப் படகுகள் விரைந்து சென்று சாலை கடற்கரைப்பகுதியில் மறைந்ததாகவும் - பாதுகாப்பு வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

(ஐ-3)

## மனிதாபிமான அடிப்படையில் விடுதலைகோரி

## களுத்துறைக் கைதிகள் பிரதமருக்குக் கடிதம்

கொழும்பு.ஜன.23

சமாதான சூழல் ஏற்பட்டிருக்கும் இவ்வேளையில் மனிதாபிமான அடிப்படையில் தங்களை விடுதலை செய்யுமாறு களுத்துறை சிறைச்சாலையில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் 102 தமிழ் அரசியல் கைதிகள் கையொப்பமிட்டு பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு உருக்கமான கடிதம் ஒன்றினை அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நாட்டில் இரு தசாப்தங்களுக்கு மேலாக புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கு டிசெம்பர் 5ஆம் திகதி மக்கள் ஆணையைப்பெற்று பிரதமராக தெரிவு செய்யப்பட்ட தங்களை தமிழ் அரசியல் கைதிகளாகிய நாங்கள் வாழ்த்துவதுடன் தாங்கள் மேற்கொள்ளவிருக்கும் சமாதான முயற்சிகள் யாவும் வெற்றிபெற இறைஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறோம் - என்று தமிழ் அரசியல் கைதிகள் தெரிவித்துள்ளனர்.

அக்கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

கடந்தகால அரசினால் வகைதொகையின்றி கைது செய்யப்பட்டு கடும்சித்திரவதைகளுக்கு உள்ளாக்கப்பட்டு தமிழர் என்ற காரணத்தினால் போலியான குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு நீண்டகாலமாக சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டுள்ளோம்.

திகதி குறிப்பிடப்படாது விசாரணைகள் இன்றி தடுத்துவைக்கப்படல், நீதிமன்றங்களில் ஒருவருடம், ஆறுமாதம் என நீண்டகால தவணைகள் வழங்கி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# யாழ்.மண்ணின் அவலங்கள் நீங்க பாப்பரசரின் பிரதிநிதி உதவவேண்டும்

## மக்கள் சார்பில் கத்தோலிக்கத் திருச்சபை வேண்டுகோள்

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்மண்ணின் அவலநிலை நீங்கி, மக்களின் சுதந்திர வாழ்வு மீண்டும் நிலைநிறுத்தப்பட திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதி உதவிட வேண்டும்.

இவ்வாறு யாழ்கத்தோலிக்க திருச்சபை கோரியுள்ளது.

யாழ்.வந்திருந்த பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் இலங்கைப் பிரதிநிதி மேதகு தோமஸ் யேங் செங் நாண் ஆண்டகையை வரவேற்கும் முகமாக யாழ். பேராலயத்தின் முன்றிலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற விழாவிலேயே இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

யாழ்.ஆயர் அதிவண தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை தலைமையில் இடம்பெற்ற இவ்விழாவில் திருத்தந்தையின் பிரதிநிதியை வரவேற்று யாழ்.ஆயர், குருக்கள், துறவியர், பொதுநிலையினர் சார்பில் அறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையிலேயே இது தொடர்பான கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்களின் முன்னிலையில் வாசிக்கப்பட்டு திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதியிடம் கையளிக்கப்பட்ட அவ்வறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

எப்போதோ நீங்கள் பார்க்க விரும்பிய இந்த யாழ்.மண்ணில் இப்போது துப்பாக்கிகள் ஓய்ந்திருக்கின்றனவே தவிர ஒழித்துக்கட்டப்படவில்லை. எறிகணைகள் தம் பாய்ச்சலை நிறுத்தி நிற்கின்றனவேயன்றி நிர்மூலமாக்கப்படவில்லை. சுற்றிவளைப்புக்கள் வேகம் தணிந்தனவேயன்றி, கோபம் தீரவில்லை. எமது 'செம்மணிகளும் சாவகச்சேரிகளும்' அவைகளுள் 'கிருஷாந்திகளும்' எப்பொழுதும் நாம் காவப்போகும் சுமைகள். 'பிடிபடுபவன் எவனும் வாளால் மடிவான். அவர்களின் கண்கள் காணும்படியே அவர்களுடைய குழந்தைகள் நசுக்கப்படுவர். அவர்களின் வீடுகள் கொள்ளையடிக்கப்படும். அவர்களின் மனைவியர் கற்பழிக்கப்படுவர்' என்று இறைவாக்கினர் இசையாஸ் கூறியவை நமது கசப்பான அனுபவங்கள். பாணன் இசைத்த எமது யாழ்.அழக்கூட முடியாத நிலைக்கு மீண்டும் மீண்டும் பாழடிக்கப்பட்டது. போர்வெறி கொண்ட மண்ணல்ல இது. யாழின் இசைகண்ட மண். அமைதிக்காக ஏங்கும் மக்கள் வாழும் மண். நீதியுடன் கூடிய அமைதியே நிலைத்து நிற்கும் எனக் கூக்குரலிட்டு சரிநிகர் சமானமாக வாழத் துடிப்பவர்கள் நடமாடும் மண் எங்கள் மண். அமைதி நீதியின்மேல் கட்டப்பட வேண்டும் என்பதையே இம்மக்களும் வேண்டி நிற்கிறார்கள். இந் நிலையைத் திரிபுபடுத்தாது எடுத்துரைக்கும் தகுதி உங்களுக்கு உண்டு. இன்று வீசும் சமாதானக்காற்று புயலாக மாறாது தென்றலாக வீச வேண்டுகின்றோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்குப்பதிலளித்து உரையாற்றிய திருத்தந்தையின் பிரதிநிதி -

'அழகிய இலங்கைத்தீவில் இடம்பெறும் கொடிய யுத்தத்தினால் ஆயிரக் கணக்கானோர் கொல்லப்பட்டும், அநாதைகளாக்கப்பட்டும் இருப்பதை தான் நன்கு அறிவதாகக் குறிப்பிட்டு, வடக்கு - தெற்கு மக்கள் புதிய அரசின் உதவியுடன் சமாதானத்தையடைய எடுக்கும் முயற்சிகள் நல்ல பலனை அளிக்க தான் உழைப்பதாகத் தெரிவித்தார்.

இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள், திருமலை - மட்டுநகர் ஆயர் அதிவண கிங்ஸ்லிசுவாமிபிள்ளை ஆண்டகை, மன்னார் ஆயர் அதிவண.இராயப்பு யோசப் ஆண்டகை மற்றும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசியர் பொ.பாலசுந்தரம்பிள்ளை, மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம், யாழ்.மேயர் செல்லன் கந்தையன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

இறுதியில் திருமறைக்கலாமன்றம், சென்.ஜோண் பொஸ்கோ வித்தியாலயம் ஆகியவற்றின் மாணவர்கள் வழங்கிய கலை நிகழ்வுகளும் இடம்பெற்றன.

(ஐ-15)



யாழ்ப்பாணம் பிரதான வீதியில், முன்னாள் ஆயர் அமரர் எமிலியானுஸ்பிள்ளையின் ஞாபகார்த்தமாக நிறுவப்பட்டுள்ள ஓய்வுபெற்ற குருக்களுக்கான இல்லம் கடந்த 19 ஆம் திகதி திருத்தந்தையின் இலங்கைப் பிரதிநிதி திறந்துவைத்தார்.

இந்தத் திறப்புவிழாக்க மன்னார் ஆயர் மற்றும் யாழ்.ஆயர் சகிதம் வருகைதந்த திருத்தந்தையின் பிரதிநிதி மேதக யேங் செங் நான் ஆண்டகையை யாழ்.மாவட்ட குருமுதல்வர் அருட் தந்தை ஜே.பி.அ.செல்வராஜா வரவேற்பதைப் படத்தில் காணலாம். (க-6)

## மிதிவெடியில் யுவதி கால் இழப்பு

பருத்தித்துறை சந்தை மேற்கு வீதியில் நேற்றுப் பிற்பகல் 4.30 மணியளவில் இடம்பெற்ற மிதிவெடிச் சம்பவம் ஒன்றில் சிக்கி யுவதி ஒருவர் படுகாயமடைந்தார்.

இதே இடத்தைச் சேர்ந்த சத்தியமூர்த்தி சுகந்தினி (வயது 20) என்ற யுவதியே தனது வலது காலை இழந்த நிலையில் மந்திகை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதேவேளை -

கடந்த 22 நாள்களுக்குள் இரு விவசாயிகள் உட்பட மூவர் மிதிவெடிகளில் சிக்கிப் படுகாயமடைந்துள்ளமை புள்ளி விவரங்கள் மூலம் தெரியவந்துள்ளது. (ஐ-6-109-117)

## 9 கூட்டுறவுச் சங்கங்களுக்கு தலா ஒரு பவுஸர் ம.எண்ணெய்

### நேற்று விநியோகிக்கப்பட்டது

யாழ்ப்பாணம்,ஜன.23

பொதுமக்களுக்கு பங்கீட்டு அட்டைக்கு வழங்கவென தலா ஒவ்வொரு பவுஸர் (6 ஆயிரத்து 600 லீற்றர்) மண்எண்ணெய் ஒன்பது ப.நோ.கூ. சங்கங்களுக்கு நேற்று வழங்கப்பட்டதாக யாழ்.மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் தெரிவித்தார்.

மானிப்பாய், சுன்னாகம், சங்கானை, பண்டத்தரிப்பு, யாழ்ப்பாணம், நல்லூர், தெல்லிப்பழை, அளவெட்டி, கோப்பாய் ப.நோ.கூட்டுறவுச் சங்கங்களுக்கே நேற்று மண்எண்ணெய் வழங்கப்பட்டது.

அச்சுவேலி, புலோலி, பருத்தித்துறை, உடுப்பிட்டி, நெல்லியடி - கரவெட்டி ஆகிய ப.நோ.கூ.சங்கங்களுக்கு இன்று எண்ணெய் வழங்கப்படும் என்றும் - அவர் தெரிவித்தார்.

தற்சமயம் கையிருப்பில் உள்ள 3 லட்சத்து 80 ஆயிரம் லீற்றர்கள் மண்எண்ணெய் படிப்படியாக சகல ப.நோ.கூ.சங்கங்களுக்கும் வழங்கப்படும் என்றும் -

குடாநாட்டுக்குத் தேவையான 13 லட்சம் லீற்றர் மண்எண்ணெயைத் தொடர்ந்து வழங்குவதற்கு பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அரச அதிபருக்கு உறுதிமொழி அளித்துள்ளது என்றும் - அவர் கூறினார்.

பங்கீட்டு அட்டைகளுக்கு 4 லீற்றர் வீதம் மண்எண்ணெய் விநியோகம் நேற்றுப் பெரும்பாலான ப.நோ.கூ.சங்கங்களின் கிளைகளில் ஆரம்பமாகியது.

## தற்காலிக இடமாற்றம் பெற்ற ஆசிரியர் மீண்டும் வன்னிக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.23

தற்காலிக இடமாற்றம் பெற்று யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் வன்னி மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள் அனைவரையும் உடனடியாக தமது சொந்தப் பிரதேசத்திற்குச் சென்று கடமையாற்றும்படி கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வன்னி மாவட்டத்திலிருந்து கோப்பாய் மற்றும் பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளுக்கு பயிற்சிக்கென வந்து பயிற்சியை முடித்த பின்னர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்குச் செல்ல மறுத்து யாழ். மாவட்டத்தில் தீவகப் பாடசாலைகளில் பணிபுரியும் ஆசிரியர்களுக்கே இக்கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

வடக்கு - கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு இக்கடிதங்களை உரியவர்களுக்கு அனுப்பி வைத்துள்ளது.

இதேவேளை -

கடந்த ஆண்டின் இறுதிப்பகுதியில் நியமனம் வழங்கப்பட்ட பட்டதாரிப் பயிலுநர் ஆசிரியர்களில் யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த - வன்னி மாவட்டத்திற்கு நியமனம் பெற்ற - ஆசிரியர்களையும் உடனடியாக நியமனம் வழங்கப்பட்ட இடங்களுக்குச் சென்று கடமையாற்றுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-8-10-86)

### புதிய ஆட்சியிலும் ஏமாற்றமே மிச்சம்

## கிளர்ந்தெழுந்து போராட மீனவர் தயாராகின்றனர்!

### எச்சரிக்கின்றார் சமாசப் பிரதிநிதி

யாழ்ப்பாணம்,ஜன.23

தம்மீதான தடைகளை உடைத்துக் கொள்வதற்காக யாழ்.மீனவ சமுதாயம் கிளர்ந்தெழத் தொடங்கிவிட்டது. அவர்கள் என்ன செய்யப் போகிறார்கள் என்று எவருக்கும் தெரியவில்லை. அதனால் ஏற்படும் அனைத்து விளைவுகளுக்கும் அரசே பொறுப்பேற்க வேண்டும்.

இவ்வாறு எச்சரிக்கை செய்திருக்கிறார் வடமராட்சி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமார்.

வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

புதிய அரசு பதவியேற்ற பின்னர் மாற்றம் வரும் என எதிர்பார்த்துக் காத்திருந்த எமது மீனவ சமுதாயம் மீண்டுமொரு தடவை ஏமாற்றப்பட்டுள்ளது. அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்த புனர்வாழ்வு அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தனாவை எமது சங்கப் பிரதிநிதிகள் சந்தித்தனர். எனினும் அதனால் எந்தவித பலனும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மீன்பிடித்தடை நீக்கம் தொடர்பாக அவர் எமக்கு எந்தவித உறுதிமொழியையும் வழங்கவில்லை. மீனவர்களுக்கு வழங்கப்படுகின்ற நிவாரணத்தை உடனடியாக இரட்டிப்பாக்க நடவடிக்கை எடுப்பதாகமட்டும் கூறிவிட்டுச் சென்றார். அதற்குக் கூட இன்றுவரை எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமன்றி வடமராட்சி கிழக்கு, மீனவ குடும்பங்கள் தமது குறைகளை அமைச்சரிடம் எடுத்துச் சொல்ல முற்பட்ட போதும் அதற்கும் அனுமதி வழங்கப்படவில்லை.

எமது மீனவ சமுதாயம் ஏன் இவ்வாறு புறக்கணிக்கப்படுகிறது என்று எமக்குப் புரியவில்லை. கல்வி, சுகாதாரம் மற்றும் மின்சாரம் என்று பல வழிகளிலும் எமது கரையோர வாழ் மக்கள் ஒதுக்கப்படுவது எமக்குக் கவலையைத் தருகின்றது.


இராணுவப் பகுதிக்குச் சென்ற புலிகள் விடுவிக்கப்படுகின்றார்கள். புலிகளின் பகுதிக்குச் சென்ற பொலீஸாரும் விடுவிக்கப்படுகிறார்கள். மோதல் தவிர்ப்பு, யுத்தநிறுத்தம் என்பனவும் அமுலில் உள்ளன. ஆனால் பாதுகாப்புக் காரணங்களிற்காகவே மீன்பிடித் தடை அமுலில் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படியாயின் படையினர், மீனவர்களைத்தான் தமது எதிரிகளாகக் கருதுகின்றார்களோ?

அரசியல் கட்சிகள் கூட மீனவர் பிரச்சினையை அரசியல் லாபம் தேடுவதற்காக மட்டுமே பயன்படுத்துகின்றன. கடந்த டிசெம்பர் மாதம் 23 ஆம் திகதி பருத்தித்துறை பஸ்நிலையத்தில் இடம்பெற்ற மீனவர்களின் ஆர்ப்பாட்டத்தின் முடிவில் உரையாற்றிய தி.மகேஸ்வரன் 43 நாள்களுக்குள் மீன்பிடித் தடையை நீக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறினார். ஈ.பி.டி.பி.யோ அதற்கும் ஒருபடி மேலே போய் இரண்டு வாரங்களில் மீன்பிடித் தடை நீக்கப்படும் என்று கூறியது. இன்றுவரை எந்தவொரு உருப்படியான நடவடிக்கையையும் காணவில்லை. எமது பிரதேசத்தின் பெரும்பாலான மக்கள் தமிழர் கூட்டமைப்புக்கே வாக்களித்தனர். ஆனால் அவர்களோ மீனவர் பிரச்சினைகள் தொடர்பாக மூச்சுவிடுவதாகக் கூடத் தெரியவில்லை என்று அவர் தெரிவித்தார்.

(ஐ-9)


## 2ஆவது நினைவு தினம்

மண்ணின் மைந்தனாய் 03 - 04 - 1954



விண்ணின் மைந்தனாய் 23 - 01 - 2000

அர்ப்பணமாய்: 20-07-1979

அமர குரு அருட்தந்தை

இ.ஜே.அருமைநாயகம் B.A.

(யாழ். ஆயரின் முன்னாள் செயலர்)

அருமை எனும் தீபம் அணைந்து
ஆண்டு, இரண்டானதே
அதிமதுர அருமை நாயகமே - நின்னருட்பணி
ஆலமரமாய் அருள் பரப்புதே
ஆண்டுகள் பல உருண்டோடினாலும்
அருமைத் தந்தாய் - நின்
அன்பு மணம் அழகிய வதனம்
அருமைக் குணம் ஆத்மீக தாகம்
அர்ப்பண வாழ்வு
அழியா எம் மனதை மட்டுமன்றி
மண்ணையும் விட்டு நீங்கா
ஆண்டவன் சந்நிதி நின்று
பாசமுடன் பரிந்துரைப்பாய் பாரினுள்ளோர்க்காய்.

இல.85, தேவாலய வீதி;
யாழ்ப்பாணம்.

உங்கள் அன்புள்ளங்கள்:
பூவிலிங்கம் குடும்பத்தினர்.

# அமெரிக்க மையத்தின் மீது கொல்கத்தாவில் தாக்குதல்!

## 5 பொலீஸார் பலி; 16 பேர்காயம்

கொல்கத்தா,ஜன.23

இந்தியாவின் மேற்கு வங்க மாநிலம் கொல்கத்தாவில் அமெரிக்க அரசின் தகவல் மையத்தின் மீது அடையாளம் தெரியாதோர் நேற்றுக் காலை நடத்திய தாக்குதலில் 5 பொலீஸார் கொல்லப்பட்டனர்; மேலும் 16 பேர் காயமடைந்தனர். அவர்களில் மூவர் ஆபத்தான நிலையிலுள்ளனர்.

கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க உதவித் தூதராலயத்தின் அருகே இருந்த தகவல் மையமே தாக்குதலுக்குள்ளாகியது. உள்ளூர் நேரப்படி காலை 6.15 மணியளவில் இந்தத் தாக்குதல் இடம்பெற்றது. இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த ஆயுதங்கள் தாங்கிய நால்வரே தாக்குதலை நடத்தியுள்ளனர்.

தாக்குதலுக்கு நேற்று மாலை வரை எவரும் பொறுப்பேற்கவில்லை. எனினும் உள்ளூர் புலனாய்வுப் பிரிவினர் இஸ்லாமியத் தீவிரவாதிகளே தாக்குதலை நடத்தியிருக்கக்கூடும் என்று சந்தேகிப்பதாகத் தெரிவித்தனர்.


தாக்குதல் நடந்த அமெரிக்க மையத்தின் நுழைவாயில்.

தூதரகம் மற்றும் தகவல் மையம் ஆகியவற்றைச் சேர்ந்த பணியாளர்கள் எவரும் தாக்குதலில் காயமடையவில்லை என்று கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க ஸ்தானிகர் கிறிஸ்தோபர் சன்ட்ரோலினி தெரிவித்தார்.

கொல்கத்தாவில் அமெரிக்க அரசுக்குச் சொந்தமான இரண்டு கட்டடத் தொகுதிகள் உள்ளன. அவற்றில் ஒன்றான அமெரிக்க மையமே தாக்குதலுக்கு இலக்கானது.

அமெரிக்கத் தகவல் நூலகம், தூதரகத்தின் பொதுசனத் தொடர்பு அலுவலகம், செய்திப் பிரிவு மற்றும் கலைநிகழ்ச்சிகள் நடக்கும் அரங்கு ஆகியவை அமெரிக்க மையத்தில் இடம்பெற்றிருந்தன.

தாக்குதல்கள் தொடர்பான எந்தவித எச்சரிக்கைகளையும் இந்தியப் புலனாய்வுப் பிரிவினர் தமக்குத் தெரிவித்திருக்கவில்லை என்று அமெரிக்கத் தூதரகப் பேச்சாளர் ரெக்ஸ் மொஸார் தெரிவித்தார். (ஒ)

### காலக்கெடு நீடிப்பு

கொலம்பியாவில் அரசுக்கும் இடதுசாரிக் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையிலான பேச்சில் தீர்வு காண்பதற்கான காலக்கெடு ஏப்ரல்மாதம் 7ஆம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளது.

அரசுப்பிரதிநிதி கமிலோ கோமெஜ மற்றும் தீவிரவாதத் தலைவர் ரவூல் ரைஸ் ஆகியோர் இணைந்து வெளியிட்ட அறிக்கை ஒன்றில் இதனைத் தெரிவித்தனர். (ஒ)

## தீவிரவாதிகள் தாக்குதல்

# 8 குழந்தைகள் உட்பட 11 பேர் காஷ்மீரில் பலி!

ஸ்ரீநகர்,ஜன.23

இந்தியாவின் கட்டுப்பாட்டிலுள்ள காஷ்மீர் பகுதியில் தீவிரவாதிகள் 3 இஸ்லாமியக் குடும்பங்களைச் சேர்ந்த 11 பேரைச் சுட்டுக்கொன்றுவிட்டனர். அவர்களில் 8 பேர் குழந்தைகள் ஆவர்.

நேற்றுமுன்தினம் நள்ளிரவு புஞ் மாவட்டம் சால்பாபேரா கிராமத்தில் இந்தப் படுகொலைகள் நிகழ்ந்ததாகப் பொலீஸார் தெரிவித்தனர்.

சாஹிர் ஹூசைன் என்பவரின் வீட்டுக்குள் 20 தீவிரவாதிகள் நுழைந்து, உணவும் தங்க வசதியும் கேட்டனர். அதற்கு வீட்டிலிருந்தோர் மறுக்கவே, அவர்கள்மீது தீவிரவாதிகள் கண்மூடித்தனமாகச் சுட்டதில் 3 பேர் உயிரிழந்தனர்.

அதன் பின்னர் முஹமட் ஜாமீல் என்பவரின் வீட்டுக்குள் புகுந்து, ஜாமீலின் மனைவியையும் அவரது 4 குழந்தைகளையும் கொன்றனர்.

முஹமட் அக்ரம் என்பவரின் 3 வயது மகளையும் ஆறுமாதக் குழந்தையையும் கொன்றனர். இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த 2 பெண்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு காஷ்மீர் பொலீஸார் மேலும் தெரிவித்தனர். (ஏ-ரி)

# பாகிஸ்தான் தேடும் நபர்கள் இந்தியாவில் உள்ளனராம்

## அதிபர் முஷாரப் கூறுகிறார்

பாகிஸ்தானில் குற்றம் இழைத்துவிட்டு, இந்தியாவில் தஞ்சம் அடைந்துள்ளவர்களை பாகிஸ்தானிடம் மீண்டும் ஒப்படைக்கவேண்டும் என்று பாகிஸ்தானிய அதிபர் ஜெனரல் பர்வேஷ் முஷாரப் கேட்டுள்ளார்.

இந்தியாவில் வசிப்பதாக பாகிஸ்தான் கூறும் 'கிரிமினல்களின்' பட்டியல் ஒன்றை விரைவில் இந்திய அரசிடம் கையளிக்க உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

முஷாரப்பின் வேண்டுகோள் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்சிங், பாகிஸ்தானில் இழைத்த குற்றங்களுக்காக அந்நாட்டு அரசால் தேடப்படும் குற்றவாளிகளுக்கு இந்தியா ஒருபோதும் புகலிடம் அளிக்காது என்றார்.

இந்தியாவில் நிகழ்ந்த தீவிரவாதச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள் எனக் கூறப்படும் 20 பேர் பாகிஸ்தானில் இருப்பதாகவும் -

அவர்களைத் தம்மிடம் ஒப்படைக்கும்படியும் -

இந்திய அரசு பாகிஸ்தானுக்கு அழுத்தம் கொடுத்து வருகிறது.

இந்த நிலையில் அதிபர் முஷாரப் இத்தகைய வேண்டுகோளை இந்தியாவிடம் விடுத்திருப்பது, தந்திரோபாய நடவடிக்கை என்றே அவதானிகள் கருதுகின்றனர். (ஏ-ரி)

# ஆப்கானுக்கு அனுப்பப்பட்ட இந்திய கோதுமையில் கிருமி

## பாகிஸ்தான் குற்றச்சாட்டு

இஸ்லாமாபாத்,ஜன.23

ஆப்கானிஸ்தானுக்கு கிருமிகள் கலந்த கோதுமையை இந்தியா அனுப்பிவைத்துள்ளதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டியுள்ளது.

போரினால் சீகுலைந்துள்ள ஆப்கானிஸ்தானுக்கு 10 லட்சம் தொன்கள் கோதுமையை அனுப்புவதாக இந்தியா உறுதியளித்திருந்தது. இதில் முதல் கட்டமாக 50 ஆயிரம் தொன்கள் கோதுமையை ஆப்கானுக்கு இந்தியா அனுப்பியுள்ளது. இந்தியா அனுப்பியுள்ள கோதுமையை பாகிஸ்தான் ஊடாகவே ஆப்கானிஸ்தானுக்குக் கொண்டுசெல்லமுடியும்.

இந்த நிலையில், இந்தியா அனுப்பும் கோதுமையில் கிருமிகள் நிறைந்திருப்பதால் அவை பாகிஸ்தானியக் கோதுமைக்கு ஊறுவிளைவிக்கக் கூடும் என்ற அச்சத்தால் தனது நாட்டின் வழியே அவற்றை எடுத்துச் செல்ல பாகிஸ்தான் அரசு அனுமதி மறுத்துள்ளது.

ஆனால் பாகிஸ்தானின் குற்றச்சாட்டை இந்தியா வன்மையாக மறுத்துள்ளது. தாம் அனுப்பிய கோதுமை இன்னமும் பாகிஸ்தானுக்குள் செல்லாத நிலையில் அதுபற்றி அந்த நாடு குற்றச்சாட்டுத் தெரிவித்திருப்பது வியப்பளிப்பதாக இந்திய அதிகாரிகள் தெரிவித்தனர். (ஏ-ரி)


குவாண்டனாமா தளத்தில் தலிபான் கைதியொருவரை இழுத்துச் செல்லும் அமெரிக்கப் படையினரைப் படத்தில் காணலாம்.

## இஸ்ரேலின் தொடர் இராணுவ நடவடிக்கை

# நப்லஸில் 4பலஸ்தீனர்கள் நேற்றுச் சுட்டுக்கொலை!

மேற்குக்கரை நகரான நப்லஸில் நான்கு பலஸ்தீனர்களை இஸ்ரேலியப் படையினர் நேற்றுச் சுட்டுக்கொன்றுவிட்டதாகக் கூறப்படுகிறது.

நேற்றுக்காலை நப்லஸின் புறநகர்ப் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சண்டையில் ஹமாஸ் தீவிரவாதிகளான 4 பேரைத் தாம் கொன்றதாக இஸ்ரேலியப் படையினர் அறிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற பகுதியைத் தாம் முன்னதாகச் சுற்றிவளைத்ததாகவும் -

அப்போது அங்கு மறைந்திருந்த பலஸ்தீனத் தீவிரவாதிகள் சுடத் தொடங்கியதையடுத்தே மோதல் உருவானதாகவும் -

இஸ்ரேலிய இராணுவம் கூறியது.

இதேவேளை, நேற்றுமுன்தினம் துல்கரம் நகரைச் சுற்றிவளைத்து இஸ்ரேலிய இராணுவம் மேற்கொண்ட பழிவாங்கல் நடவடிக்கையை நேற்று நப்லஸ் நகருக்கும் விஸ்தரித்ததாகவும் -

அந்தச் சமயத்திலேயே 4 பலஸ்தீனர்களை இஸ்ரேலிய இராணுவம் சுட்டுக்கொன்றதாகவும் -

பலஸ்தீன வட்டாரங்கள் மேற்கோள்காட்டிச் சுயாதீனச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.


நப்லஸில் இஸ்ரேலிய டாங்கிகள் ரோந்து

கடந்த 16 மாத காலமாக மேற்குக்கரை மற்றும காஸா பகுதியில் இஸ்ரேல் இராணுவம் மேற்கொண்ட பாரிய இராணுவ நடவடிக்கையாக துல்கரம் மீதான சுற்றிவளைப்பு கருதப்படுகிறது.

கடந்த 16 மாதங்களில் பலஸ்தீன நகரங்களுக்குள் ஊடுருவி இஸ்ரேலிய இராணுவம் நடவடிக்கைகளை நடத்தி வந்தபோதும், முழு நகரத்தையும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்து நடவடிக்கை மேற்கொண்டது துல்கரமிலேயே என்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

# ஆப்கானிஸ்தான் கைதிகள் விவகாரம்; சட்டஎதிர்ப்பை சந்திக்கிறது அமெரிக்கா!

லொஸ்ஏஞ்சல்ஸ்,ஜன.23

கியூபாவின் குவாண்டனாமா தளத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள தலிபான் மற்றும் அல்கெய்டா கைதிகள் தொடர்பாக முதலாவது சட்டச் சவாலை அமெரிக்கா எதிர் கொண்டுள்ளது.

லொஸ்ஏஞ்சல்ஸ் நகர நீதிமன்றத்தில் மனித உரிமை ஆர்வலர்களால் அமெரிக்க அரசுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

குவாண்டனாமா தளத்தில் சிறை வைக்கப்பட்டுள்ள கைதிகளை நீதிமன்றத்தின் முன்நிறுத்தும்படியும் -

அவர்களுக்கு எதிராகச் சட்டப்படி குற்றச்சாட்டுகளைப் பதிவுசெய்யும்படியும் -

அமெரிக்க அரசுக்கு உத்தரவிடக் கோரியே மனித உரிமை ஆர்வலர்கள் நீதிமன்றத்தை அணுகியுள்ளனர்.

முன்னாள் அமெரிக்க சட்டமா அதிபர் எர்வின் கெமரென்ஸ்கி தலைமையிலான மனித உரிமை ஆர்வலர் குழு ஒன்றே இந்த வழக்கைத் தாக்கல் செய்துள்ளது.

'குவாண்டனாமா' கைதிகள் விவகாரத்தில் அமெரிக்கச் சட்டங்கள் மற்றும் ஜெனீவா ஒப்பந்தம் ஆகியவை மீறப்பட்டுள்ளதாக கெமரென்ஸ்கி தெரிவித்தார். அதிபர் புஷ்ஷின் நிர்வாகத்துக்கு மனிதர்களின் தரத்தைப் புரிய வைப்பதே தமது நோக்கம் என்று மனித உரிமை ஆர்வலர்களின் சட்டத்தரணி எரீபன் யக்மான் தெரிவித்தார்.

ஆப்கானிஸ்தானில் பிடிபட்ட தலிபான் மற்றும் அல்கெய்டா கைதிகளை கியூபாவில் உள்ள தனது குவாண்டனாமா தளத்தில் அமெரிக்கா சிறை வைத்துள்ளது. அவர்கள் போர்க் கைதிகளாகக் கருதப்படமாட்டார்கள் என்று அறிவித்த அமெரிக்கா அவர்களை மோசமான முறையில் நடத்துவதாக சர்வதேசரீதியில் எதிர்ப்புகள் கிளம்பியுள்ள நிலையில அது குறித்த சட்ட எதிர்ப்பை அமெரிக்கா சந்திப்பது குறிப்பிடத்தக்கது. (ஒ)

## 'எல்லைகளற்ற உலகம் வேண்டும்'

# சட்டவிரோதக் குடியேறிகள் இத்தாலியில் ஆர்ப்பாட்டம்!

ரோம்,ஜன.23

இத்தாலியில் குடியேற்றவாசிகளை ஒடுக்கக் கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டுவரும் இத்தாலிய அரசைக் கண்டித்து ஆயிரக்கணக்கானவர்கள் அங்கு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

ரோம் நகரில் இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் 'எல்லைகளற்ற உலகம் வேண்டும்' என்ற கோஷம் எழுப்பப்பட்டது.

குடியேற்றவாசிகள் தொடர்பான புதிய பிரேரணை ஒன்றின்மீது இத்தாலிய நாடாளுமன்றத்தில் விவாதம் இடம்பெற்றுவருகிறது.

ஐரோப்பிய ஒன்றியத்தில் அங்கம வகிக்கும் நாடுகளைச் சாராத குடியேற்றவாசிகள் தொழில் ஒப்பந்த அடிப்படையில் மட்டுமே இத்தாலியில் தங்கவும் -

தொழில் ஒப்பந்தம் முடிந்த பின்னர் இத்தாலியை விட்டு வெளியேற அவர்களை நிர்ப்பந்திக்கவும் -

புதிய பிரேரணையில் வழிசெய்யப்பட்டுள்ளது.

தற்போது இத்தாலியில் உள்ள சட்டவிரோதக் குயேற்றவாசிகள்மீது கடுமையான நடவடிக்கை எடுக்க உதவும் புதிய பிரேரணை, அவர்களை இலகுவாக நாடு கடத்தவும் வழியேற்படுத்தும்.

இத்தாலியில் சுமார் 3 லட்சம் சட்டவிரோதக் குடியேற்றவாசிகள் தங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.(ஒ-9)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

புறொயிலர், கல்பேட்ஸ் இறைச் சிக்கோழிகள் விற்பனைக்கு உண்டு. புறொயிலர் 1kg - 130/-. சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு: றாஜீவ், ஆனைக்கோட்டைச் சந்தி. T.P.3529, 2867. (97386)

### இறைச்சிக்கோழி விற்பனைக்கு

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுத்தம்செய்து (பாதிக் கோழி உட்பட) தினமும் பெற்றுக் கொள்ளலாம். இல.19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (97106)

### திருமண சேவை

எங்களிடம் எல்லா மதத்திலும் மணமக்கள் உண்டு. ஜாதகக் குறிப்பு, படத்துடன் தொடர்புகொள்ளவும். வேதத்திலும் மணமக்கள் உண்டு. துர்க்கா திருமண சேவை, 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (97406)

### ஒரு காதலின் கதை

340 நாடகங்கள் எழுதிய அராலியூர் ந.சுந்தரம்பிள்ளையின் இரண்டாவது நாவல். இலங்கைத் தமிழரது வரலாற்றைக் கூறுவது இனப்பிரச்சினையின் ஆரம்ப காலத்தை விளக்குகின்றது. 182 பக்கங்கள். (97410)

### திருத்துதல்

மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், சகல ஸ்டில் கமரா வகைகள், எலக்ரோனிக் பிளாஸ்கன் என்பன திருத்துதல் ஆகிய வேலைகளுக்கு: சுநாராயணசாமி, 301, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (கண்ணாதிட்டிச் சந்திக்கு அருகில் மேல்மாடி) (97418)

### வகுப்புகள்

6ஆம் தரத்தில் இருந்து 11 வரையான பாடங்கள் கற்பிக்கப்படுகின்றன. அத்துடன் ஆங்கிலத்தில் கதைப்பதற்கும் அனுமதிக்கு விக்னேஸ்வரன ஆச்சாரி. 426 (302), காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(97365)

## நாய்கள் நஞ்சூட்டி அழிப்பு!

ஆனைக்கோட்டை சாவல்கட்டு-சுதுமலை ஆகிய பகுதிகளில் இன்று புதன்கிழமை நாய்கள் நஞ்சூட்டி அழிக்கப்படவுள்ளன.

மானிப்பாய் கிராம எல்லைக்குட்பட்ட மேற்படி பகுதியில் வளர்ப்பு நாய்களைக் கட்டி வளர்க்குமாறு உப அலுவலக பொறுப்பதிகாரி சு. கிருபாகரன் கேட்டுள்ளார். (ம-185)

## சாவல்கட்டில் பொதுச்சந்தை திறந்து வைப்பு

வலி.தென்மேற்கு.ஜன.23

புதிதாக அமைக்கப்பட்ட சாவல்கட்டு பொதுச்சந்தையை சண்டிலிப்பாய் பிரதேச செயலக கிராம அபிவிருத்தி அதிகாரி க. சிறிபதி திரைநீக்கம் செய்து திறந்துவைத்தார்.

வலி.தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபை 5லட்சம் ரூபா செலவில் மேற்படி புதிய சந்தையை அமைத்திருந்தது.

பிரதேச சபைச் செயலாளர் பி. விக்டர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் மானிப்பாய் சட்டத்தரணி மா. தியாகராசா, சபை உறுப்பினர் அன்ரனி ஜோர்ஜ் மரியதாஸ், அரச ஒப்பந்தக்காரர் மா.மனோகரன், தொழில்நுட்ப அலுவலர் ந. ஜெயசீலன், எஸ். கணேசன், மகாத்மா சனசமூக நிலையத் தலைவர் ரி. விஜயகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-185)

## சுகாதார விழிப்புணர்வு கருத்தரங்குகள்

சாவகச்சேரி, ஜன.23

அல்வாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பகுதிக்குட்பட்ட குழந்தைகள்நல சிகிச்சை நிலையங்களில் சுகாதாரப் பிரிவினரால் சுகாதார விழிப்புணர்வுக் கருத்தரங்குகள், சுகாதாரக்கல்வி ஊட்டல் என்பன நடத்தப்பட்டு வருகின்றன.

பாடசாலை மாணவர்கள் மட்டத்தில் வயிற்றோட்டம், நெருப்புக் காச்சல், செங்கண்மாரி, மலேரியா, டெங்குக் காய்ச்சல் போன்ற தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் நோக்கில் இக்கருத்தரங்குகள் நடத்தப்படுவதாக அல்வாய் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சி.நகுலேஸ்வரன் தெரிவித்தார். (ஜ-31)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

27.12.2001 அன்று வெளியாகிய
"தேவகானம்"
என்னும் இசை ஒலி நாடாப் பேழைக்கு (C.D.) மிகவும் சிறந்த முறையில் ஓகன் இசை மீட்டியவரான

**செல்வன் S.மைக்கல்சாள்ஸ்**

அவர்களைப் பாராட்டி வாழ்த்துகின்றோம். மிகவும் சிறிய வயதில் நல்லதொரு கலைஞனாக மிளிரும், இவரது இசைக் கலைப்பணி சிறக்கவும் மேன்மேலும் வளரவும் குழந்தை யேசுவின் ஆசி வேண்டிப் பிரார்த்தித்து வாழ்த்துகின்றோம். (97416) - யாழ்ப்பாண நண்பர்கள்.

## வாழ்த்துகின்றோம்

*கல்வி நிர்வாகப் பணியின் பன்முகங்களிலே பணியாற்றிய*

**திரு.V.T.செல்வரட்ணம்** அவர்கள

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளராகப் பதவி உயர்வு பெற்றமையையிட்டு அவரைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
யா/கரணவாய் மணியகாரன் தோட்டம்
த.க.பா.
(97419)

## ரைப் செற்றிங் தெரிந்தவர் தேவை

எமது பதிப்பகத்துக்கு கொம்பியூட்டர் ரைப் செற்றிங் செய்வதில் தேர்ச்சியுள்ளவர் தேவை. சொந்தக் கையெழுத்தில் சுயவிவரங்களுடன் நேரில்வரவும்.

**மருதம் பதிப்பகம் லிமிட்டட்** *(தனியார்)*
நெ.ம.ம.வி.வீதி,
நெல்லியடி, கரவெட்டி. (97413)

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



பதவி உயர்வு பெற்று
திருகோணமலை
தலைமை அலுவலகத்திற்கு
மாற்றலாகிச் செல்லும்

**உயர்திரு. S.K.சண்முகநாதன்**
*(கூட். அ. உ. ஆணையாளர், யாழ்ப்பாணம்)*

யாழ்.மாவட்ட மீளக் குடியமர்வு காலத்தில் பொறுப்பேற்று சிதைவடைந்திருந்த கூட்டுறவு நிறுவனங்களைச் சீரமைத்து கூட்டுறவு நிறுவனங்களின் எதிர்காலத்திற்கு ஏற்றவடிவம் கொடுத்த அவரது சேவையைப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பணிப்பாளர், பணியாளர், அங்கத்தவர்கள்,
தென்மராட்சி ப.தெ.வ.அ.கூ.ச. கொத்தணி, வரணி.
பளை ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
கொடிகாமம் ப.தெ.வ.அ.கூ.சங்கம்.
சாவகச்சேரி ப.தெ.வ.அ.கூ.சங்கம். (97409)

## தங்குமிட வசதிகள்

தலைநகரம் கொழும்பு செல்வோருக்கு நகரின் மத்தியில் சிறந்த சுகாதாரம் நிறைந்த தரமான தங்குமிட வசதிகள் உண்டு.

**அற்லஸ் இன்**
76 A, ஸ்ரீ கதிரேசன் வீதி,
கொழும்பு - 13.

**அற்லஸ் லொட்ஜ்**
167, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 12.

தங்குமிட வசதிகளோடு இணைந்த சேவைகளாக உள்நாட்டு, வெளிநாட்டு தொலைபேசி அழைப்புகளும், பக்ஸ், போட்டோ பிரதி இடுதல், ஆவணங்கள் கவரிடுதல், குளிரூட்டப்பட்ட, குளிரூட்டப்படாத வாகனச் சேவை என்பனவும் கிடைக்கும்.

மேலும் எமது அஞ்சல் முகவர் நிலையம் ஊடாக உள்நாட்டு, வெளிநாட்டுப் பொதிகளை எதுவித சிரமுமின்றி அனுப்பிவைக்கலாம். தவிர எமது பிரயாண முகவர் நிலையத்தினூடாக குறைந்த கட்டணத்தில் விமானப் பயணச் சீட்டுக்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

*தொடர்புகொள்வதற்கு:-*
T.P.: 01-422612
01-342195
பக்ஸ்: 436254

☛ *மிக விரைவில் யாழ்ப்பாணத்தில் எமது முகவர் நிலையம் திறந்து வைக்கப்படும்.* (97407)

## பாராட்டி வாழ்த்துகிறோம்

பளை அபிவிருத்திச் சபையின் புதிய தலைவராக 18-01-2002 இல் பொறுப்பேற்றுக் கொண்ட



**உயர்திரு. பொன். சிவபாதம்**
*அவர்களை*
வரவேற்று அவர் பணி சிறக்க
பாராட்டி வாழ்த்துகிறோம்.

பணிப்பாளர், பணியாளர் , அங்கத்தவர்கள்,
*தென்மராட்சி ப. தெ. வ. அ. கூ. ச. கொத்தணி, வரணி.*
*பளை ப. தெ. வ. அ. கூ. சங்கம்.*
*கொடிகாமம். ப. தெ. வ. அ. கூ. சங்கம்.*
*சாவகச்சேரி. ப. தெ. வ. அ. கூ. சங்கம்.*
(97309)

## வாடிக்கையாளர்களுக்கு ஒரு நற்செய்தி!

யாழ்.மாவட்டத்தில் வேறு எங்குமே இல்லாத
கலர் லேசர் பிறன்ரர் மூலம்
16"x 12" அளவுகளில்
பிறின்ரிங் வேலைகளை சிறந்தமுறையில்
எம்மிடம் செய்து கொள்ளலாம்.

**மருதம் பதிப்பகம் லிமிட்**
(தனியார்)
நெ.ம.வி.வீதி, நெல்லியடி, கரவெட்டி.
தொலைபேசி இல.070-212229, 070-212329, PP3210
பக்ஸ் - 070-212371
(97414)

## கண்ணீர் அஞ்சலி

*எமது நிலைய நிர்வாகசபை உறுப்பினர்*
திரு.க.ஸ்ரீகருணாகரன் அவர்களின அன்புத் தந்தை

**செல்லையா கந்தையா**
(ஓய்வுபெற்ற அதிபர்)

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*சிவகாமசுந்தரி சனசமூக நிலையம்,*
*இணுவில் கிழக்கு.* (97415) - நிர்வாகத்தினர்.

# மரண அறிவித்தல்கள்

## சங்கரப்பிள்ளை கந்தசாமி

(இளைப்பாறிய பொலீஸ் உத்தியோகத்தர்)

புலோலி, புற்றளையைப் பிறப்பிடமாகவும் சாரையடியை வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தசாமி அவர்கள் நேற்று (2002-01-22) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சங்கரப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும் கமலாதேவியின் அன்புக் கணவரும், பகவதி, பாக்கியம், மண்டலாய், சிவக்கொழுந்து, சுப்பிரமணியம், செல்வரத்தினம் ஆகியோரின் அன்புச் சகோதரனும், செல்வராணி (ஆசிரியர், யா/வட இந்து மகளிர் கல்லூரி), யோகராணி (குடும்பநல சேவையாளர், அச்சுவேலி அரசினர் வைத்தியசாலை), கருணாநிதி ஆகியோரின் அன்புத் தந்தையாரும் சி.தில்லைநாதன் (ஆசிரிய ஆலோசகர்; வடமராட்சிக் கல்விவலயம்), திருமதி க.சாந்தி ஆகியோரின் அன்பு மாமனாரும் அறிவரன், திவ்வியவேள் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (2002-01-23) புதன்கிழமை முற்பகல் 10மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் ஆனைவிழுந்தான் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

"தமிழகம்",
சாரையடி, புலோலி. (97421)

தகவல்
மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்.

## திருமதி வைத்திலிங்கம் இராஜமணி

வீமன்காமம், தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவுகும் கொண்ட திருமதி வைத்திலிங்கம் இராஜமணி 21.01.2002 திங்கட்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பையா - அருமைமுத்துவின் அன்பு மகளும் செல்லத்துரை வைத்திலிங்கத்தின் (புன்னாலைக்கட்டுவன் வடக்கு) அன்பு மனைவியும் சுசி, நளாயினி (கணக்காளர்), நிர்மலா (டாக்டர், லண்டன்), றஞ்சி (கனடா), கெங்காதரன், ரவிதரன், நந்தினி (கனடா), கிரிதரன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், கிருஸ்ணராஜ், பாலன் (பொறியியலாளர், லண்டன்), மதனரூபன் (கனடா), அனுசா ஆகியோரின் அன்பு மாமியாரும் பத்மாவதி சம்பந்தர், மனோன்மணி நடராஜா, காலஞ்சென்ற மாசிலாமணி, காலஞ்சென்ற சிவஞானம் ஆகியோரின் அருமைச் சகோதரியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2002) புதன்கிழமை மாலை 4.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கனத்தை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

*74, 37ஆம் ஒழுங்கை,*
*கொழும்பு - 06*
தொலைபேசி எண்: 01-592852.

தகவல்:
செ.வைத்திலிங்கம் (கணவர்)
சுகுணாதேவி சிவதாசன்
*ஐயனார் வீதி,*
*புன்னாலைக்கட்டுவன் வடக்கு,*
*சுன்னாகம்.*
(C/20425)

உதயன்

## உண்மையை உணர்ந்தால் சமாதானம் பிறக்கும்

விடுதலைப் புலிகள் தமது காவலில் இருந்த பத்து சிங்களக் கைதிகளை தலைவர் வே.பிரபாகரனின் பணிப்பின்பேரில் - மனிதாபிமான அடிப்படையில் - சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையாக - விடுத்திருக்கின்றார்கள்.

தம்மிடம் போர்க்கைதிகளாக இருப்போரை சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையாக விடுதலைப் புலிகள் அவ்வப்போது விடுவித்துவந்திருப்பதும் -

ஆனால் இந்த சமிக்ஞைகளுக்கு அரசுத் தரப்பிலிருந்து அந்தந்த நேரங்களில் நல்லெண்ண பதில் சமிக்ஞைகள் வெளிவிடப்படாமல் இருந்து வந்திருப்பதும் - நமக்குத் தெரிந்தவைதான்.

பூஸா, வெலிக்கடை, பிந்துனுவெவ என்று சிங்களச் சிறைகளிலும் தடுப்பு முகாம்களிலும் இராணுவ - பொலீஸ் மறைவிடங்களிலும் தமிழ்க் கைதிகள்மீது அவ்வப்போது நடக்கும் சித்திரவதைகள், படுகொலைகள் உலகம் அறிந்த இரகசியம்.

நீதிமன்றங்களில் இந்தச் சித்திரவதைக் காதைகள்பலவும் அம்பலமாகியிருப்பதும் நமக்குத் தெரிந்ததுதான்.

ஆனால் புலிகளின் காவலில் இருந்து, தற்போது விடுவிக்கப்பட்ட பத்துப் போர்க் கைதிகளும் புலிகளின் தடுப்புக் காவலில் நீண்டபல வருடங்கள் தாங்கள் கௌரவமாகவும் மனதாபிமானத்துடனும் நடத்தப்பட்டதை சுயாதீன செய்தியாளர்களுக்கு எடுத்துரைத்திருக்கின்றார்கள்.

அரசு, புலிகள் தரப்பில் நடத்தைமுறையில் உள்ள இந்த வேறுபாட்டைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் தமிழ்ச்செல்வன் கைதிகள் விடுவிப்பு நிகழ்வை ஒட்டிய தமது செய்தியில் தெளிவாகத் துலாம்பரப்படுத்தியிருக்கின்றார்.

அந்த நிகழ்வில் தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டிய மற்றையதொரு விடயமும் சிங்கள அரசும், சிங்கள மக்களும், சர்வதேச உலகமும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக அவதானிக்கவேண்டிய - அடிப்படை விடயமாக - அமைகின்றது.

"எமது போராட்டம் சிங்கள மக்களுக்கு எதிரானதல்ல. சிங்கள மக்களின் நியாயமான உணர்வுகளை நாம் மதிக்கின்றோம். சிங்கள மக்கள் தமது மண்ணில் சுதந்திரமாகவும், கௌரவமாகவும், சகல உரிமைகளுடனும் இராணுவக் கெடுபிடி மற்றும் அழுத்தங்களின்றியும் வாழ்வது போன்று எமது மக்களும் எமது மண்ணில் அமைதியாக - சுயகௌரவத்துடன் - வாழ வேண்டும் என்றே நாம் விரும்புகின்றோம்." - இப்படி தமிழ்ச்செல்வன் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.

இந்தப் போராட்டம் சிங்கள மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்கானதல்ல; சிங்கள மக்களை அடக்கி ஒடுக்குவதற்காகவோ அடிமைப்படுத்துவதற்காகவோ மேற்கொள்ளப்படுவதல்ல. தங்கள் மண்ணில் தங்கள் வாழ்வுக்கும், இருப்புக்கும், உரிமைக்குமாகத் தமிழர்கள் நடத்தும் வாழ்வியல் போராட்டம் இது என்பதை இந்தக் கைதிகள் விடுவிப்பு நிகழ்வில் தமிழ்ச்செல்வன் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

விடுவிக்கப்பட்ட கைதிகளும், அச்சமயம் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் சென்று உண்மை நிலையைக் கண்டறிந்த - இரண்டாயிரத்துக்கும் அதிகமான - தென்பகுதி மக்களும் இந்த உண்மையை வடக்கிலிருந்து - வன்னியிலிருந்து - எடுத்துச்சென்று தென்பகுதி மக்களின் முன்னால்வைத்து அவர்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

ஆண்டாண்டு காலமாகச் சிங்கள மக்களைத் தவறாக வழிநடத்திவரும் சிங்களப் பேரினவாதிகளின் பிரசாரப் பூதத்தினின்றும், அந்த மக்களை விடுவித்து உண்மை நிலையை - யதார்த்தத்தை - அவர்களுக்கு எடுத்தியம்பி, அவர்கள்மத்தியில் தமிழர் குறித்தும், வாழ்வுக்கான தமிழர்களது போராட்டம் குறித்தும் விழிப்பு ஏற்படுத்த இவர்கள் உழைக்கவேண்டும்.

அவ்வாறு சிங்கள மக்கள் தமிழர்களின் போராட்டம் மற்றும் அதன் நோக்கம் குறித்து உணரும் காலம் வந்தால் நாட்டைப் பீடித்திருக்கும் இந்தப் பேரழிவுப் பேயான போருக்கு முடிவு வந்துவிடும்; அமைதித் தீர்வும் இணக்க நிலையும் தானாகத் தோன்றிவிடும்; சமாதானம் கிட்டி விடும்.

## வடமராட்சி கல்விப் பணிமனை புதிய கட்டடத்துக்கு அடிக்கல்

வடமராட்சி கிழக்கு,ஜன.23

வடமராட்சி வலயக் கல்விப் பணிமனைக்குப் புதிய கட்டடம் அமைப்பதற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் கடந்த சனிக்கிழமை பருத்தித்துறையில் நடைபெற்றது.

வடமராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராசா புதிய கட்டடத்திற்கான அடிக்கல்லை வைபவரீதியாக நட்டுவைத்தார்.

வலயக் கல்விப் பணிமனை அமைக்க முதற்கட்டமாக 17 லட்சம் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஓராங்கட்டைச் சந்திக்கு அண்மையில் வடமராட்சி வலயக் கல்வி அதிகாரிகள், ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோரின் நிதி உதவியுடன் ஏற்கனவே கொள்வனவு செய்யப்பட்ட காணியில் புதிய கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

தற்போது வடமராட்சி வலயக் கல்விப் பணிமனை புலோலி மெ.மி.த.க. பாடசாலையின் ஒரு பகுதியிலேயே இயங்கிவருகின்றது.

(ஐ-182)

### தேர்த் தரிப்பிட திறப்பு விழா

ஊர்காவற்றுறை,ஜன.23

காரைநகர் ஈழத்துச் சிதம்பரத்தில் சுமார் 13 லட்சம் ரூபா செலவில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தேர்த் தரிப்பிடம் எதிர்வரும் தைப்பூசத் தினத்தன்று வைபவரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பிள்ளையார், ஐயனார், அம்பாள் ஆகிய மூர்த்திகளுக்கான தேர்த் தரிப்பிடமே தற்பொழுது புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ளதாக மேற்படி ஆலய திருப்பணிச் சபையினர் தெரிவித்தனர்.

(ம-16)

## நாட்டு நடப்பு

### ஆச்சி படும் பாடு - IV

"ஆசை ஆரை விட்டதென்று
அப்புத் துரையர் சிரித்திட
பேசிப் பேசி போனிலை
பேரனிட்டை போய் விட்டாள்
ஆசை நாயகி கடிதமும்
அனுப்பும் காசும் கிடைத்திட
காசைச் சேர்த்துக் கிழவனார்
கடவுள் தொண்டு செய்கிறார்.
பூசை கண்டு மகிழ்ந்திட
போய் வாறார் கோயில்கள்
காசைக் கொஞ்சம் சேர்க்கிறார்
கடைசி கொள்ளிக்கு வேண்டுமாம்."

*- விகடகவி.*

## மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகம் பருத்தித்துறையில் இயங்குவதால் பாதிப்பு!

### மாணவர் ஒன்றியம் அரச அதிபருக்கு மகஜர்

யாழ்ப்பாணம்,ஜன.23

வடமராட்சி கிழக்குக்கான மருதங்கேணி உதவி அரச அதிபர் அலுவலகம் அந்தப் பிரதேசத்துக்குள் இயங்காததால் அப்பிரதேச அபிவிருத்தி பெரிதும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விடயத்ததை வடமராட்சி கிழக்கு பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம் யாழ்.அரச அதிபரின் கவனத்துக்குச் சுட்டிக்காட்டி இருக்கிறது.

இதுதொடர்பாக மேற்படி ஒன்றியம் அரச அதிபருக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் 1996இல் குடத்தனைக்கு மாற்றப்பட்டது. அதனைத் தொடர்ந்து பருத்தித்துறையிலுள்ள தும்பளை எனுமிடத்திற்கு 2000ஆம் ஆண்டு இக்காரியாலயம் மீண்டும் மாற்றப்பட்டது. இக்காரியாலய இடமாற்றங்கள் அண்மைக்காலங்களில் நடந்த இராணுவ நடவடிக்கை காரணமாகவே ஏற்பட்டன.

தற்போது மருதங்கேணிப்பகுதியில் கிராமிய வைத்தியசாலை இயங்கிவருகின்றது. இப்பகுதியில் இருந்த பாடசாலைகளில் அரைவாசிக்குமேற்பட்ட பாடசாலைகள் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவு எல்லைக்குள் இயங்கி வருகின்றன. இப்பகுதியில் சமுர்த்திக் காரியாலயம் இயங்கிக்கொண்டிருக்கின்றது. கிராமசேவையாளர் பிரிவு அலுவலகங்களும் இயங்கிவருகின்றன. அத்துடன் அரைவாசிக்கு மேற்பட்ட குடியிருப்பாளர்கள் மீளக்குடியமர்ந்திருப்பதனால் விவசாயம், வேறு தொழில்கள் மற்றும் நாளாந்த நடவடிக்கைகளை அப்பகுதியில் மேற்கொண்டு வருகின்றனர்.

மருதங்கேணி பகுதிக்குள் கடல் மண், மரம் என்பன பெரியளவில் மோசடி செய்யப்பட்டு வருகின்றன. இதனால் கடல் நீர் எமது பிரதேசத்துக்குள் உட்புகவும் எமது விவசாய நிலங்கள் உவர் நிலமாகுவதற்கும் ஏதுவாகின்றது. திருட்டுத்தனமான இந்த நடவடிக்கைகள் காரணமாக அமைவதுடன் எமது பிரதேசத்திற்கும் அரசிற்கும் வரவேண்டிய வருவாய் வீண்விரயமாகின்றது. இதனைத் தடுப்பதற்கு அல்லது கண்காணிப்பதற்கு உதவி அரசாங்க அதிபர் காரியாலயமும் அதன் செயற்பாடுகளும் அங்கில்லாமல் இருப்பதே காரணமாகும். மேலும் மருதங்கேணிப் பகுதியில் வாழும் மக்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயம் மூலம் பெறும் சகல தேவைகளுக்காகவும் இப்பகுதியில் இருந்து சுமார் 10 மைல்களுக்கு பிரயாணம் செய்ய வேண்டியுள்ளது. அத்துடன் அபிவிருத்தியடையாத பகுதிக்குள் அரச சார்பற்ற நிறுவனம் ஒன்று ஆற்றும் சேவைகள் உதவி அரச அதிபர் காரியாலயத்தினூடே நடைபெற வேண்டும். உதவி தரும் நிறுவனங்கள் உதவிதர முன்வந்திருந்தும் எமது பிரதேசத்துக்குள் உதவி அரசாங்கதிபர் காரியாலயம் இல்லாமல் இருப்பதால் இச்சேவை கூட எமக்குக் கிட்டாது போவதற்கு குறித்த காரியாலயம் பருத்தித்துறையில் இயங்குவதே காரணம்.

இது விடயமாக மருதங்கேணி உதவி அரசாங்க அதிபருக்கு பல தடவைகள் விளக்கிக் கோரிக்கைகளை விடுத்திருந்தோம். அதற்கு இதுவரை எந்தநடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. எனவே இவ் விடயம் தொடர்பாக யாழ்ப்பாண அரசாங்க அதிபருக்கும் முறைப்பாட்டைச் செய்துள்ளோம். இதன் பிரதிகள் பொது நிர்வாக அமைச்சருக்கும், தமிழ் அரசியல்வாதிகளுக்கும் அனுப்பிவைத்துள்ளோம். இவ்விடயம் சம்மந்தமாக ஒரு மாத காலத்துக்குள் உரியநடவடிக்கை எடுக்கத்தவறும் பட்சத்தில் சாத்வீகப் போராட்டத்தை நடத்த எண்ணியுள்ளோம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

### அபிவிருத்தி தொண்டர்களுக்கு சம்பளம் இல்லை

யாழ்ப்பாணம்,ஜன.23

நல்லூர் பிரதேச சபைக்கென இரண்டாவது தடவையாக நியமனம் செய்யப்பட்ட அபிவிருத்தித் தொண்டர்களுக்கு நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களுக்கான சம்பளப்பணம் இன்னும் வழங்கப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சுமார் 38பேர் நேற்றுக்காலை யாழ்.செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபரைச் சந்தித்து தமது நிலையை எடுத்துக் கூறியதுடன், சம்பளப் பணத்தைப் பெற்றுத்தருமாறும் கடிதமூலம் கேட்டுக் கொண்டனர்.

(ம-10)

## 100 நாள் அபிவிருத்தித் திட்ட அறிக்கை அனுப்பப் பணிப்பு

வலி.தென்மேற்கு,ஜன.23

நூறு நாள் அபிவிருத்தித் திட்டம் தொடர்பான இரு வாரகால அறிக்கையை உடன் அனுப்பிவைக்குமாறு திணைக்களத் தலைவர்கள் கேட்டுள்ளனர்.

மேற்படி அறிவுறுத்தலை யாழ். அரசாங்க அதிபர் க.சண்முகநாதன் விடுத்துள்ளார்.

100 நாள் அபிவிருத்தித் திட்ட வேலைகளை ஏற்கனவே ஆரம்பித்தவர்கள், முன்மொழிவுகள் அனுப்பி வேலைகளை ஆரம்பிக்க உள்ளவர்கள் உடனடியாக அதற்கென உள்ள படிவத்தினை பூரணப்படுத்தி அனுப்புமாறு யாழ்.அரசாங்க அதிபர் கேட்டுள்ளார்.

(ஐ-185)

### உதயவாக்கு

செலவுகள் யாவற்றிலும்,
காலத்தை வீணாக்குதலே
அதிகச் செலவும் ஊதாரித்
தனமுமாகும்.

### நாளை

தை 11
வியாழக்கிழமை
(24-01-2002)
திதி : தசமி
முற்பகல் 10.26 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
முற்பகல் : 10.14 வரை.
கரிநாள்
சுபநேரம் : 8.06 - 9.36
ராகுகாலம் : 2.06 - 3.36
(பழைய நேரப்படி)

## விவசாய உத்தியோகத்தர்களுக்கு திருமலையில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜன.23

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள விவசாயத் திணைக்களங்களின் உதவிப்பணிப்பாளர்கள், விவசாய உத்தியோகத்தர்களுக்கான வருடாந்தக் கலந்துரையாடல் எதிர்வரும் 30ஆம் திகதி தொடக்கம் அடுத்த மாதம் 3ஆம் திகதி வரை திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண விவசாயத் திணைக்களத் தலைமை அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண விவசாயப் பணிப்பாளர் கலாநிதி சி.ஞானசந்திரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் எதிர்கால விவசாய நடைமுறைகள் சம்பந்தமான பிரச்சினைகளுக்குத் தீர்வுகாணவும் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(ஐ-180)

### கும்பாபிஷேகம்

நவாலி, ஜன.23

ஆனைக்கோட்டை புற்கைதின்னிப பிள்ளையார் திருக்கோயிலின் மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 7.46 முதல் 8 மணி ஒருநிமிடம் வரையுள்ள சுபவேளையில் இடம்பெறும்

பக்தர்கள் எண்ணைக்காப்பு சாத்தும நிகழ்வு 26ஆம்திகதி சனிக்கிழமை காலை 10மணி தொடக்கம் மறுநாள் பிற்பகல் 3 மணிவரையும் இடம்பெறும்.

(ஐ-100)

### கொடிகாமம் வரை மினிபஸ் சேவை

யாழ்ப்பாணம்.ஜன.23

யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமத்துக்குத் தனியார் மினிபஸ் சேவை இவ்வாரம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள தமது சொந்த இருப்பிடங்களைப் பார்வையிடச் செல்வோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதை அடுத்தே, தனியார் மினிபஸ்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து கொடிகாமம்வரை சேவையில் ஈடுபடத்தொடங்கியுள்ளன.

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களும் கொடிகாமம் வரை சேவையில் ஈடுபட்டுவருவது தெரிந்ததே.

(ஐ-180)

### நல்லை ஆதீனத்தில் இன்றைய இசை அரங்கு

யாழ்ப்பாணம்.ஜன.23

நல்லை ஆதீனத்தின் புதிய கலாமண்டபத்தில் நடைபெற்றுவரும் "முத்தமிழ்" நிகழ்வுகளின் ஐந்தாவது நாளான இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிமுதல் மங்கள இசை, இசைக்கச்சேரி என்பன இடம்பெறும்.

யாழ்.பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் திருமதி கலைவாணி இராமநாதன் இன்றைய நிகழ்வுகளுக்குத் தலைமை வகிப்பார்.பிரம்மஸ்ரீ தி. கெங்காதரக் குருக்கள் ஆசியுரை வழங்குவார்.

எம்.இராமதாஸ் குழுவினர் மங்கள இசை வழங்குவர். கு.நக்கீரன் குழுவினர், செல்வி பரமேஸ்வரி கணேசன் குழுவினர் வழங்கும் இசைக்கச்சேரிகளும் இடம்பெறும்.

(ம-7)

### அச்சுவேலியில் மாடுகள் இரவில் திருட்டு

அச்சுவேலி.ஜன.23

அச்சுவேலிப் பகுதியில் இரவு வேளைகளில் மாடுகள் களவாடப்படுகின்றன. இதனால் கால்நடை வளர்ப்போர் பெரும் கஷ்டங்களை எதிர்நோக்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விவசாயிகள் விளைநிலத்திற்கு இயற்கைப் பசளைகளை இடும் நோக்கத்துடன் மாடுகளைத் தோட்ட நிலங்களில் இரவில் கட்டிப் பராமரிப்பது வழக்கம்.

இந்தவகையில் அச்சுவேலி தெற்கில் உள்ள பாலச்சந்திரனின் தோட்டத்தில் கட்டியிருந்த 6 ஆயிரம் ரூபா பெறுமதியான காளை மாடு சென்றமாதம் திருடப்பட்டது.

இந்தவாரம் செல்லத்துரை எனபவரின் மாடு திருடப்பட்டுள்ளது என விவசாயிகள் சம்மேளனத்தால் புகார் செய்யப்பட்டுள்ளது. (ம-11)

### தார் வந்தது

யாழ்ப்பாணம்,ஜன.23

அண்மையில் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்துசேர்ந்த 'பிறைட் ஒவ் சவுத்' கப்பலில் வீதி அபிவிருத்தித் திணைக்களத்துக்கு, 750 பரல்களில் தார் எடுத்து வரப்பட்டுள்ளது.

(ம-10)

# ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷ

# புதிய நவகோண சித்திரத் தேர் வெள்ளோ

23-01-2

## இந்து சமய விவகார அமைச்சரின் ஆசிச் செய்தி

சர்வலோக நாயகியாய், அன்னை பராசக்தி தெய்வமாய், பிரதிட்சயாய்க் காட்சிதந்து அருள்பாலித்து, அருளாட்சி செய்துவரும ஏழாலை வசந்தபுரம் அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பிகைக்கு வடிவமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா இன்று நடைபெறுகிறது.

அருளுருவாய் ஒளிவீசும் அம்மையின் திருவாலயம், அற்புதம் மிக்கதும் ஆனந்தம் தரவல்லதாகவும் அமைந்து விளங்குகின்றது. இத்தகைய மேன்மைமிகு திருப்பதியானது. தாயாரின் அருந்தொண்டால் அறம் வளர்க்கும் நிலையமாக அமைக்கப்பட்டு, ஆலயத்தின் சார்பாக அறப்பணிகள் அற்புதமாக நடைபெறுகின்றன. பக்தி நலமும் சேவை மனப்பான்மையுடையவரான அம்மன் தாயாரின் முயற்சியினால் ஆலயத்தின் வளர்ச்சி மிகவேகமாக நடைபெற்றுவருகிறது.

இத்தகைய மேன்மைமிகு திருவாலயத்தின் புதிய சித்திரத்தேர் வெள்ளோட்ட விழா மிகவும் மகோன்னத நிலையில் நடைபெற்று நலம்தர, நலம்தரும் நாயகியாம் நாகபூஷணி அன்னையின் தன்னருளை வேண்டி அம்பிகையின் ஆலயம் மேன்மேலும் வளர்ச்சியுறவும் அம்மன் தாயார் அவர்களின் தயாளமிக்க அறப்பணிகள் சிறக்கவும் நாட்டில் சாந்தியையும் சமாதானத்தையும் அம்பிகை அருளவேண்டுமெனவும் எல்லாம்வல்ல அன்னையை உளமாரப் பிரார்த்தித்து வேண்டுகிறேன்.

தி.மகேஸ்வரன்.

## சிற்பாசாரியாரின் வாழ்த்துச் செய்தி

களபாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் தேவஸ்தானத்தில் நவகோணப் புதிய சித்திரத்தேர் நிர்மாணிக்கப்பட்டு இன்று வெள்ளோட்ட விழா சிறப்புற நடைபெறத் திருவருள் கைகூடியுள்ளது.



அம்மனுக்கு உகந்ததான தேர்ச்சிற்ப அமைப்பிலே, சிற்பசாஸ்திர விதிகளுக்கு அமைய எமது தந்தையார் சிற்பச் சக்கரவர்த்தி ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்கள் தொடக்கிவைத்த இத் தெய்வீகத் தேர்த்திருப்பணியை, அம்மனின் அருளாணைப்படியும், எமது அன்புத் தந்தையாரின் ஆசீர்வாதத்துடனும் இனிதே நிறைவு செய்துள்ளோம்.

இலங்கையிலும், இலங்கைக்கு வெளியேயும் நூற்றிருபத்தைந்துக்கு மேற்பட்ட புதிய சித்திரத் தேர்களை நிர்மாணித்த எமது சிற்பாலயத்தின் கைதேர்ந்த சிற்பாசாரியார்களின் கைவண்ணத்தில் இச் சித்திரத்தேர் உருவாக்கப்பட்டுள்ளது.

பல வகையான சிறப்பம்சங்களும் தனித்தன்மையும், சிற்பசாஸ்திர விதிமுறைகளைப் பேணும் மரபும் கொண்ட எமது ஆறுமுகம் சிற்பாலயம் இன்று களபாவோடை அருள்மிகு ஸ்ரீ வசந்தநாகபூஷணி அம்பாளுக்கு அமைத்த நவகோணப் புதிய சித்திரத்தேர் புதுப்பொலிவும் வனப்பும் கொண்டமைவதை இன்று அடியார்கள் நேரிற்கண்டு இன்புறுவர்.

எல்லா வகையிலும் திருவருள்பாலிக்கும் அம்மனின் அருளாசியும், அம்மன் தாயாரின் அருளாசியும், எமது அன்புத் தந்தையார் தேர்க்கலை அரசு ஆறுமுகம் ஜீவரட்ணம் அவர்களது ஞானநோக்கும் எமக்கு என்றும் உள்நின்று உந்து சக்தியாக விளங்கும் என்பதைத் தெரிவித்து இந்த ஆசியுரையை நிறைவு செய்கிறேன்.

சிற்பப் பிரகாஷ்
ஜீவரட்ணம் ஜெயபிரகாஷ்

## தேர் வெள்ளோட்ட ஆசியுரை

பார்புகழ் பூத்த ஏழாலையூர் ஸ்ரீவசந்த நாகபூஷணி அம்பாள் ஆலயத்தில் பலதரப்பட்ட திருப்பணி வேலைகள் நடைபெற்று, இவ்வாலயம் புதுப் பொலிவோடு காட்சிதருவதை நான் அறிவேன். அம்பாளின் திருவருளால் கும்பாபிஷேகம் நடந்து முடிவுற்றது. அடியார்களின் ஊக்கத்தினாலும், கருவில் திருவோடு உதித்த அம்மன் தெய்வத்தாலும் சித்திரத் தேர் அமைக்கப்பட்டு, அம்மனின் தேர் வெள்ளோட்டம் இப்பொழுது நடைபெறுகின்றது. அம்பிகை தன்னருளை, தன்னை அர்ச்சிக்கும் சின்னம்மன் வாயிலாக வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறாள். தேரேறி வரும்போதும் அருளினை அள்ளித்தரக் காத்திருக்கிறாள். தேர் வெள்ளோட்டம் காணவரும் அடியவர்களுக்கு நிச்சயமாக அருள் கிடைக்குமென்பது உறுதி. மற்றும் எளியவர், அவஸ்தையுறும் யாவருக்கும் துன்பம் துடைக்கும் வகையில் அம்மன் தாயார் செயற்பட்டுவருகிறார். யானும் அவரின் அருளினை, அன்பினைப் பெற்ற அடியேன் என்ற வகையில், மேலும் அம்மன் தாயின் பணி சிறக்க வாழ்த்தி அமைகிறேன்.

சுபம்

தங்கள் சேவையில் ஞானபண்டித சேவா சுரபி
வைத்திய கலாநிதி சி.கதிரவேற்பிள்ளை
மாவட்ட வைத்திய அதிகாரி, ஆதார வைத்தியசாலை,
பருத்தித்துறை (மந்திகை).

*"திரு இல்லம்"*
*கன்பொல்லை வீதி,*
*கரவெட்டி.*

## தெய்வீகம் நிறைந்த திருக்கோயில்

ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பிகையின் திருவடிகளைப் பிரார்த்தித்து வணங்கி, அவளது கடைக்கண் பார்வை கிடைக்க அந்த அம்மனையே வேண்டி நிற்போம்!

சிவம் இன்றிச் சக்தி இல்லை, சக்தி இன்றிச் சிவம் இல்லை என்பார்கள் சைவச் சான்றோர்கள். ஆண் உருவில் காட்சி தருபவர் சிவபெருமான். பெண் வடிவில் காட்சி தருபவர் சிவசக்தி. சக்தி என்றால் வல்லமை என்றும் பொருள்கொள்ளலாம். வல்லமை உடையவரான தாயாக விளங்கும் ஆதிபராசக்தி என்ற திருநாமும் அம்பிகைக்கு உண்டு. அடியார்களின் துன்பங்களை நீக்கி அருளும் பொருட்டு அன்னை பராசக்திக்கு ஏழாலையில் கோயில் கொண்டு எழுந்தருளி இருக்கின்றார்.

சக்தியை மூலவராகக் கொண்ட ஆலயங்களில் பிரசித்திபெற்ற ஓர் ஆலயமாக விளங்குகிறது ஏழாலை களபாவோடை வசந்த நாகபூஷணி அம்மன் ஆலயம். அம்பாளின் திருவருட்கடாட்சத்தினால் அடியார்கள் இஷ்ட சித்திகளைப் பெற்று மகிழ்கின்றார்கள். அம்பாளின் திருவருள் நலத்தினால் நமது பிரதேசமும் புனிதமடைகின்றது.

தெய்வீகம் மிக்கதான இத்திருவாலயத்தில் இடம்பெறும் நித்திய, நைமித்திய பூசைகள் அடியார்கள் உள்ளங்களில் அருட்பொலிவை ஏற்படுத்துகின்றன எனலாம். மஹோற்சவ காலங்கள் மக்களுக்கு மகிழ்ச்சியை ஊட்டும் காலமாகும். திருத்தேர் விழா நிகழ்வுகள் அற்புதமானவை.

*(9 ஆம் பக்கம் பார்க்க)*

## வெண்ணீறும் வேப்

## வெம்பிணியை வே

அகிலாண்ட கோடி பிரமாண்ட நாயகியாம் ஆதி பராசக்தி அன்னையவள் ஏழாலை வசந்தபுரம் ஸ்ரீ நாகபூஷணி அம்பாளாக வீற்றிருந்து தம்மை வழிபடும் அடியார்களின் துன்ப, துயரங்களை நீக்கி திருவருள்புரிகின்றாள்.

வெண்ணீறும் வேப்பிலையும் தந்து வெம்பிணியை வேரோடு களைந்தெடுக்கும் தாய் பற்றிய திருத்தல வரலாற்றைச் சிறிது சிந்திப்போம்.



### திருத்தல வரலாறு

*"அன்பருக்கு அன்பனே வா வா முருகா*
*ஆறுபடை வீடுடையாய் வா வா சண்முகா"*

என்று பக்திப் பரவசராய்ப் பாடிச் செல்கிறது பக்தர் குழாம். தாயின் திருக்கரங்களைப் பற்றியவண்ணம் சென்ற ஏழு வயதுடைய சிறுமியவள் பஜனையின் பக்திப் பிரவாகத்தில் திளைத்தவளாய் தன்னை மறந்து நடந்து சென்று கொண்டிருந்தாள். அல்லல் நீக்க, மண்ணிற் பாதம் பதித்து மகிமைகள் புரியும் அற்புதக் கந்தன் செல்வக்குமரனவன் செல்வச் சந்நிதி வேலவனின் திருக்கோயிலை நோக்கி, ஏழாலைப் பதியிலிருந்து சென்ற அப்பஜனைக் குழு செல்வக் குமரனின் ஆற்றங்கரை வழியே செல்கிறது. பஜனையின் பக்திப் பிரவாகத்தில் திளைத்துச் சென்ற சிறுமியவள் திடீரென மயக்கமடைந்தாள். பெற்ற தாயவள் தவிக்கிறாள். "முருகா முருகா" என்று அரற்றுகிறாள். உற்றார் உதவுகின்றனர். ஆலயத்துக்குச் சிறுமியைத் தூக்கிச் சென்றனர். அப்பனின் விபூதிப் பிரசாதத்தை அணிவித்துத் தீர்த்தத்தையும் கொடுத்து மயக்கத்தைத் தீர்க்க முயன்றனர். சிறுமிக்கு ஏற்பட்டது, களைப்பினாலோ, நோயினாலோ ஏற்பட்ட மயக்கமல்லவே. மயக்கம்நீங்காத உணர்விழந்த நிலையில் இருந்த சிறுமியை வைத்தியசாலைக்கு எடுத்துச்சென்றனர்.

### தீராத மயக்கம்

வைத்தியசாலையில் பலப்பல வைத்தியங்கள். மயக்கம் முற்றாக நீங்கவில்லை. குழந்தையைப் பரிசோதித்த வைத்தியர் மூன்று தினங்களாக மயக்கம் நீங்காத சிறுமியை மிகவும் கவனமாகப் பரிசோதித்தார். சிறுமியின் தாயார் உரைத்தவற்றையும் செவிமடுத்தார். முடிவில் சிறுமியின் தாயை நோக்கி "அம்மா குழந்தைக்கு நோய் எதுவும் இல்லை. குழந்தையின் கண்களைப் பாருங்கள் அருள் ஒழுகுகிறது. எனவே குழந்தையை வீட்டுக்குக் கொண்டு செல்லுங்கள்" என்று கூறலானார்.

**திருத்தல வரலாறு**

வீட்டுக்குக் கொண்டு வரப்பட்ட குழந்தை திடீர் திடீரென இடையிடையே கண் விழித்தது. எதை எதையோ பேசலாயிற்று. பெற்றவரும் சகோதரரும் கவலைப்பட்டுப் பிரார்த்தனையில் ஈடுபட்டனர். மந்திர தந்திர மூலம் சிகிச்சை செய்தனர். ஒன்றும் பலனளிக்கவில்லை. இவ்வாறு சில நாள்கள் சென்றன. சில நாள்களின்பின் திடீரென மயக்கம் நீங்கி விழிப்பு நிலைக்கு வந்த சிறுமி உக்கிரநிலையடைந்தவளாய் அருள்வாக்குச் சொல்லலானாள். அவளின் வாக்குகள் தெய்வீகமானவையாக இருந்தன. முதலில் ஒருவரும் ஒன்றும் புரியாதவராய்த் திகைத்தனர். பெற்றோரும் உறவினரும் கவலையடைந்தனர். சிலர் எள்ளி நகையாடினர். இந்நிலையில் சிறுமி பூஜை செய்யவேண்டு

"அகில உலகெங்கும் அருள் மணம் பரப்பும் அன்னையே"
"உன் கடைக்கண் பார்வை எம் மேலும் விழட்டும் அம்மா"
**குணசேகரம் விற்பனை நிலையம்**
*யாழ்ப்பாணம்.*

"பாரினில் உன் பாதக்கமலமே சரண்!"
**லக்சுமி ஜுவல்லர்ஸ்**
*312, கே.கே.எஸ், வீதி,*
*யாழ்பாணம்.*

கலியுகக் கொடுமை தீர தேரேறி வந்து
கடைக்கண் பார்வை அருள வேண்டும்.
**ஜெய கிருஸ்ணா**
*இல.20, கே.கே.எஸ்.வீதி,*
*சுன்னாகம்.*

அருளாளர் வரிசையில் நின்று அகிலமெங்கும்
அருள் மழை பொழிய வேண்டும்.
**குகன் ஸ்ரோர்ஸ்**
*ஆஸ்பத்திரி வீதி,*
*யாழ்ப்பாணம்.*

பலசரக்குப் பொருள்கள், பாடசாலை உபகரணங்கள் மற்றும்
அழகுசாதனப் பொருள்களின் உறைவிடம்
**துர்க்கா பல்பொருள் வாணிபம்**
*ஏழாலை தெற்கு,*
*மயிலங்காடு,*
*சுன்னாகம்.*
உரிமையாளர்
திரு.கே.மணிவண்ணன்(ராசன்)

தேரேறி வந்து எம் பிணிகளைத் தீர்க்க வேண்டும் தாயே!
**லிங்கன் கிறீம் ஹவுஸ்**
*கஸ்தூரியார் றோட்,*
*யாழ்ப்பாணம்.*


நம்மை நாடி வந்து அ
நம்பிணிகளைப் போ
**கரன்**
*5ஆம்*

ஸ்ரீ நாகபூ
தரமான பாண் வகை
வகைகள் ஓடர் ஐசிங்
தரமாகவும்,
பெற்றுக்கொள்ள நீங்
**சிந்துஜா**

# ணி அம்பாள் ஆலய
# ள்ளோட்ட விழா சிறப்பு மலர்
# 1-2002



## வப்பிலையும் தந்து வேரறுக்கும் தாய்



மென்று கூறிச் சுவாமி அறையில் அமர்ந்து பூஜை செய்யலானாள். பஜனை செய்ய வேண்டும் என்று கட்டளையிட்டாள். தொடர்ந்து அருள்வாக்குகளைக் கூறலானாள்.

### உய்விக்க வந்த தாய்

இந்நிலையில் பூஜை நடைபெற்றுக் கொண்டிருந்தவேளை அருள்வாக்குச் சொல்ல ஆரம்பித்தபொழுது, மிகவும் கம்பீரமாக நின்று, "நான் உலகை உய்விக்க வந்த தாய்" என்று தன்னை உணர்த்தினாள். அம்பிகையின் அருள் சிறுமி உருவில் வெளிப்படுவதை உணர்ந்தவர்கள் பக்தியுடன் வழிபாடுகளில் கலந்துகொள்ளலாயினர். பக்தர் கூட்டம் பெருகியது. பின்னர் ஒருநாள் சிறுமி அருள்நிலையில் இருந்தபோது தனது பெற்ற அன்னையை நோக்கி "எனக்கு ஓர் ஆலயம் அமைக்கவேண்டும்" என்று வேண்டிக் கொண்டாள். ஏழைத் தாயவள் என்செய்வாள்? கவலையுற்றவளாய் முயற்சி செய்யலானாள். முடிவில் அச்சிறுமியின் தாயாரால் ஒரு சிறிய ஆலயம் அமைக்கப்பட்டது.

**சிவானந்த வாரிதி**
**சிவத்திரு.வ.குமாரசாமி ஐயா**

அவ்வண்ணம் அத்தாயினால், அகில லோக மாதாவாம் அன்னை பராசக்திக்கு அன்று அமைக்கப்பட்ட ஆலயம்தான் வசந்தபுரம் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பிகையின் திருப்பெருங்கோயிலாக இன்று மலர்ந்துள்ளது. தெய்வானுகூலம் இருக்குமாயின் முற்றுப்பெறாத விடயம் ஒன்று உண்டா? அன்னை பராசக்தியே சிறுமியின் வடிவில் வெளிவந்து ஆக்ஞை பிறப்பித்தால் அகிலமே செயற்படுமுன் னிற்குமல்லவா?

### அம்மனின் அருள்

தெய்வம் ஆட்கொண்டு, தெய்வசம் சமான வாக்குக்களைக் கொடுத்தமையால் சிறுமியாம் வசந்தகுமாரி "அம்மன்" என்று எல்லோராலும் அழைக்கப்பட்டு மதிப்புக்குரியவராக மாறினார். அம்மனின் அருள்வாக்கால் கவரப்பட்டு, பக்திநெறி நிற்க விழைந்த அடியார்குழாம் பெருகத் தொடங்கியது. எள்ளி நகையாடியோரும், வேடிக்கை பார்த்தோரும் பக்திவயப்பட்டவராய் ஆலயத்தில் கூடிக்கூடி பஜனையில் ஈடுபடலாயினர். விபூதியும் வேப்பிலையும் பெற்றுத் துயர் நீங்கினர். அம்மனின் விபூதியும் வேப்பிலையும் மாற்றாத நோய்களில்லை; தீர்க்காத பிரச்சினைகள் இல்லை. அம்மனைத் தஞ்சமடைந்து, நாகபூஷணியைச் சரணடைந்தோர் துன்பம் நீங்கினர்; துயர் அகலப் பெற்றனர்; மனச் சாந்தி பெற்று மனமகிழ்வு கொண்டனர்.

மனவமைதி பெற்ற பக்தர் குழாம் தம் நன்றியறிதல் எனும் நயத்தக்க பண்பு மீதூர காணிக்கைகள் பலவற்றை அம்மனின் திருவடிகளில் சமர்ப்பித்தனர். அம்மன் தாயாரும் சேர்ந்த காணிக்கைப் பொருள்களைக் கொண்டு அன்னை பராசக்திக்கு சிறப்பானதோர் ஆலயம்

(9 ஆம் பக்கம் பார்க்க)

## குருக்களின் ஆசியுரை

இன்றைய உலகில் விஞ்ஞானம் எத்தனையோ வியத்தகு விந்தைகளைக் காட்டி நிற்கின்றது. ஆனால் அந்த விஞ்ஞானத்தினால் மெய்ஞ்ஞானத்தின் சக்தியை வெல்ல முடியாததென்பதனை ஆணித்தரமாகக் கூறிக்கொள்ளலாம்.

விஞ்ஞானிகள் கூட மெய்ஞ்ஞானத்தின் மேலான தத்துவத்தை நாடி இன்று அதனிடத்தே சரண்புகுந்து கொண்டிருக்கின்றனர். விஞ்ஞானத்தில் உடலை வளம்படுத்தலாமேயொழிய ஆத்மாவை வளம்படுத்த முடியாது. ஆத்மாவை வளம்படுத்த அரியசாதனம் மெய்ஞ்ஞானம் ஒன்றேயாகும். இது எனது அனுபவத்தில் கண்ட உண்மை.

இலங்கைத் தீவில் பல ஆலயங்கள் இருக்கின்றன. ஏழாலை களபாவோடை ஆலயம் ஆன்மீகத்திலே பரிபூரணமாகப் பரிணமித்து வேண்டியவர்க்கு வேண்டிய வரங்களைக் கொடுத்தும் நடமாடும் தெய்வமாக உலாவி, ஏழைகளின் கஷ்டங்களைப் போக்கியும் வேப்பிலை என்றும் மருந்தும் விபூதியும் உடனுக்குடன் பிணிதீர்ப்பதனையும் அன்றாடம் காணக்கூடியதாக இருக்கின்றது.

இவ்வாலயத்துக்குச் செல்லும்போது ஏதோ ஒரு சக்தி எம்மை ஆட்கொண்டு தேவலோகத்தில் நாமும் ஒருவர் போல எண்ணம் உருவாகின்றது. நாமும் தொண்டராகின்றோம். ஆலயத்தில் அன்னதானம், சிறுவர்களுக்கு கல்வி, முதியவர்களுக்கு உதவி போன்றன ஒழுங்காக நடக்கின்றன.

(9 ஆம் பக்கம் பார்க்க)

ஏழாலை - களபாவோடை - வசந்தபுரம்

### அருள்மிகு வசந்த நாகபூஷணி அம்பாள் நவகோணச் சித்திரத்தேர் வெள்ளோட்டவிழா வாழ்த்து

1. நவகோணச் சித்திரத்தேர் களபா வோடை
நாகபூ ஷணி அம்பாள் கோல வீதித்
தவமேவு வெள்ளோட்டப் பவனி யிலே
தவழ்தெய்வத் திருவழகு பொலிந்து நிற்கும்
பவம் தீர்க்கும் வசந்தநா கபூ ஷணி
பக்தருக்கு அருட்காட்சி தரவ ரும்தேர்
புவனியிலே அம்மன்தாய் ஆசி யினால்
புகழ்பூத்துத் தெய்வீகம் பொலிந்து வாழி!

2. ஆறுமுகச் சிற்பாலயப் பெருங்க லைஞன்
அழகுதிரு நெல்வேலி ஜீவ ரத்னம்
வீறுகொளத் தந்தசிற்பக் கலைஞ னாக
விளங்கிஜெயப் பிரகாஸின் கைவண் ணத்தில்
சாறு எனச் சிற்பகலா ரஸம் பருகி
சாஸ்த்தி ரோக்தமான நவகோணத்தில்
கூபுரதம் அமைத்தனனே ஜெயப்பி ரகாஸ்
கொஞ்சுரதம் தெய்வீகம் பொலிந்து வாழி!

3. வசந்தநாக பூஷணியும் களபா வோடை
வலம்வரும் வீதியிலே சித்தி ரத்தேர்
அசைந்தசைந் தாடிவரும் அழகுக் காட்சி
ஆழ்மனத்தில் ஆனந்தம் அள்ளித் தரும்
இசைந்த வடம் ஊர் கூடிப் பிடித்தி ழுத்து
இறைவி நாகபூஷணியின் அருளும் பெற்று
இசைமலிந்த புகழ்பாடி இகத்தில் அம்மன்
இறைஞ்சிடும் ஆசியுடன் இனிதே வாழி!

*"சுபம்"*

"கலாரத்னா", "கலாபூஷணம்"
"கவிமாமணி"
"மஹாவித்துவான்"
யாழ்ப்பாணம்
பிரம்மஸ்ரீ மாத.ந.வீரமணி ஐயர் M.A.-J.P.

## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

ஏழாலை களபாவோடை வசந்தபுரத்தில் எழுந்தருளி இருந்து அருளாட்சிபுரியும் வசந்த நாகபூஷணி அம்பாளுக்கு புதிதாக அமைக்கப்பட்ட சித்திரத்தேர் வெள்ளோட்ட நிகழ்ச்சி நடைபெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றோம். விழாக்களில் முக்கியமான இடத்தைப்பெறுவது தேர்த்திருவிழா. எல்லா ஆலயங்களிலும் சிறப்பாக நடைபெறுகின்ற இவ்விழா, மனிதனாகப் பிறந்த ஒவ்வோர் உயிரும் மனிதனாகப் பிறந்து இறைபதம் அடையும்பொருட்டு முக்கியத்துவம் பெறுகின்றது. தேர் என்பது மனிதனுடைய உடம்பு போன்றது. கால், அரை தலையாக உடல் பிரிவது போன்று தேருக்கும் மூன்று பிரிவுகள் உண்டு. மனிதன் வாழ்வை தேர்ந்து கொள்வதன் மூலமாகவே தேரின் வடத்தைப் பிடித்து இழுப்பதன் மூலமாக ஒவ்வொரு மனிதனும் தனது வாழ்வை தேர்ந்துகொள்கின்றான். ஆகாயம், பூமி, பாதாளம் போன்ற தேரினது அமைப்பு, தேரினது நடுப்பகுதியில் இறைவன் எழுந்தருளியிருப்பது மனிதனுடைய உடம்பில் இருதயம் போன்றது. இவ்வாலயத்திற்கு இத்தேரை ஒன்பது அமைவுகளாக (நவகோணங்கள்) அமைத்து வழங்கிய சித்திரக் கலைஞர்களைப் பாராட்டவேண்டும். இவ்வாலயத்தை அருள் நிலையில் நின்று, அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பிகையினுடைய திருவருள் எல்லோருக்கும் கிடைக்கவேண்டும் என்று உளமாரப் பிரார்த்தித்து அருளாசி கூறுகின்றோம்.

*"என்றும் வேண்டும் இன்ப அன்பு"*

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த
பரமாசார்ய ஸ்வாமிகள,
இரண்டாவது குருமஹா சந்நிதானம்,
நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனம், நல்லூர்.

## திருவருள் புரிந்து காப்பாய்

பொருள்வளரும் வேதநெறி புவனியெல்லா மோங்கப்
புனித சிவகற்பகம் போல்
அருள் வளரும் ஏழாலை வசந்தநாகபூஷணி
அன்னையென நடனமாடித்
தெருள்வளரும் காட்சிதந் தடியார்க்கு நலம் பெருகச்
சிங்காரக் கோயில் கொண்டாய்
உருள்வளரும் நவகோணச் சித்திரத் தேரேறி
உலகு குளிர அருள்செய்வாயே

ஓங்குதமிழ் மொழிபொலிய உணர்தொண்டர் குழாம் பொலிய
ஓதுதிருமுறைகள் பொலிய
தாங்குதவ தருமங்கள் பொலிய, நின் அடியார்கள்
சஞ்சலமனைத்தும் நீங்கி,
தேங்குவளம் சுகம்பொலிய சமாதான நிலை பொலிய
திருவருள் புரிந்து காப்பாய்
பூங்கமல நவகோணத் தேரேறும் வசந்தநாக
பூஷணி உமா தேவியே.

கவியோர்கி -
அருட்கவி சீ.விநாசித்தம்பி.

வந்து அருளாசியும், ஆசீர்வாதமும் அருளி,
ளைப் போக்கவேண்டும் என அம்பாளை
வேண்டுகிறோம்.
கரன் றேடேஸ்
5ஆம் குறுக்குத் தெரு,
கொழும்பு -11.

நீ நாகபூஷணி அம்மன் துணை
ன் வகைகள், பிஸ்கட் வகைகள், கேக்
ஐசிங் கேக் வகைகள் ஏனையவற்றைத்
கவும், ஓடருக்கும் உடனுக்குடன்
ள நீங்கள் நாடவேண்டிய ஸ்தாபனம்:
துஜா வெதுப்பகம்
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
உரிமையாளர்:
து.குலேந்திரன்.

அன்னையின் அருளாசியும், அருளாட்சியும், பல்லாண்டு
காலம் நமக்குக் கிடைக்க வேண்டும் என்று
ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாளை வேண்டுகின்றோம்.
சண்முகானந்தா ரெக்ஸ்ரைல்ஸ்
யாழ்ப்பாணம்.
சிங்கம்ஸ் ரெக்ஸ்ரைல்ஸ்
பிரதான வீதி,
கொழும்பு -11.

பிரியங்கா
தொலைத்தொடர்பு சேவை
பந்தல் சேவை, வீடியோ சேவை
உள்ளூர்த் தொலைபேசி இல. 070-212992
வெளியூர் தொலைபேசி இல. 0094-70-212992
மயிலங்காடு,
சுன்னாகம்.

ஆன்மீகம் தழைத்தோங்க மக்கள் சேவையே மகேசன்
சேவையென, சேவைகள் பல வளர, அருளாட்சி தொடர்ந்து
ஆன்மாக்களை ஈடேற்ற வேண்டி நிற்கும்
மங்கை ரெக்ஸ்ரைல்ஸ்
நவீன சந்தை,
சுன்னாகம்

நிலோ தொலைத் தொடர்பகம்
தொ.பே. இல. 021-2165
021-2166
070 21 2835
070 21 2899
பக்ஸ் இல. 021-2166
மற்றும் போட்டோ பிரதிகள், கவரிடுதல், கிளீன்கட் சிறந்த
முறையில் செய்து தரப்படும்.
உரிமையாளர்
து.செல்வரத்தினம்(கற்கண்டு)
ஏழாலை தெற்கு,
சுன்னாகம்.
பரந்தாமன் ஸ்ரோர்
- உள்ளூர் உற்பத்தி பொருள் ஏற்றுமதி -



குடாநாட்டில் போர்ச்சூழல் காரணமாக இடம்பெயர்ந்து வாழும் மக்களிடம் 'உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்களின் உரிமைகள்' என்ற விடயம் தொடர்பாக விளக்கம் அளிக்கும் பணியில் அகதிகளுக்கான ஐ.நா.தூதரகமும் யாழ்ப்பாண அரங்கச் செயற்பாட்டுக் குழுவும் ஈடுபட்டு வருகின்றன.

ஐ.நாவால் வரையறுக்கப்பட்டுள்ளஇடம்பெயர்ந்தவர்களுக்கான விதிமுறைகள் குடாநாட்டில் இடம்பெயர்ந்து வாழும் மக்களைச் சென்றடையச் செய்வதன் மூலம் அவர்களது உரிமைகளைப் பெறுவதற்கு அவர்களைத் தூண்டுவதே இந்தச் செயற்றிட்டத்தின் நோக்கம்.

இதனடிப்படையில் -

இடம்பெயர்ந்து வாழும் சிறுவர்களின் கல்வியுரிமை பேணப்பட வேண்டும் என்ற நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டுஅரங்கச் செயற்பாட்டுக்குழு சங்கானை, மானிப்பாய், தெல்லிப்பழை ஆகிய பகுதிகளில் உள்ள இடம்பெயர்ந்தோர் நலன்புரி முகாம்களில் வீதி நாடகங்களை நடத்தி வருகின்றது. அத்தகைய நாடகங்களில் ஒன்றான 'புண்ணுடையார்' என்ற வீதி நாடகம் உரும்பிராய் யோகபுரம் இடம்பெயர்ந்தோர் முகாமில் நிகழ்த்தப்பட்ட போது எடுக்கப்பட்ட படங்கள் இவை.

# கைதடி ஊடாக மரங்கள், விறகுகள் எடுத்துவரப் படையினர் தடைவிதிப்பு!

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்மராட்சிப் பகுதியில் இருந்து கைதடி வழியாக விறகு, மரங்கள் போன்றவற்றை எடுத்துவருவதைப் படையினர் தடைசெய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தென்மராட்சிப் பகுதியில் உள்ள வீடுகளுக்குச் சென்று திரும்பிவரும் மக்கள் சைக்கிள்கள் மற்றும் வாகனங்கள் போன்றவற்றில் தேங்காய் மட்டைகள், விறகுகள், மரங்கள் என்பனவற்றை எடுத்து வருகின்றனர்.

ஆனால் ஆள்கள் இல்லாத வீடுகளில் உள்ள வீட்டுத்தளபாடங்கள் மரங்கள், விறகுகள் போன்றவற்றையும் சிலர் அபகரித்து வருவதாக முறையிடப்பட்டதை அடுத்து படையினர் இத்தடையை விதித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதேவேளை -

கைதடி - கோப்பாய் ஊடாக பாஸ் இன்றிப் பயணம் செய்பவர்களது அடையாள அட்டைகள் கைதடி படை முகாமில் பெறப்பட்டு அதற்குப் பதிலாக சிறிய 'கார்ட்' வழங்கப்படுகின்றது. அதனைப் பெற்றே மேற்கொண்டு பயணம் செய்ய அனுமதிக்கப்படுகின்றனர்.

இப்புதிய நடைமுறை கடந்த வாரம் முதல் அமுல் செய்யப்பட்டுள்ளது. (ஐ-180)

## யாழ்.சிறைச்சாலை ஊழியர்களின் தைப்பூசவிழா

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.சிறைச்சாலை இந்து ஊழியர் சங்கத்தின் ஏற்பாட்டில் தைப்பூச விழாவும் அன்னதானமும் எதிர்வரும் 28ஆம் திகதி யாழ்.முனியப்பர் ஆலயத்தில் இடம்பெறவுள்ளன.

வருடாவருடம் இந்த நிகழ்வை சிறைச்சாலை ஊழியர்கள் நடத்துவது குறிப்பிடத்தக்கது. (ம-3)

## கற்றல் உபகரணம் அன்பளிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

வடமராட்சிப் பகுதியில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கியிருக்கும் பாடசாலை மாணவர்களுக்கு 'ஊற்று' நிறுவனத்தினால் கற்றல் உபகரணங்கள் அண்மையில் வழங்கப்பட்டன. (ம-10)

## நூல்கள் அன்பளிப்பு

தென்மராட்சி,ஜன.23

ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச நூலக புத்தக விநியோகத் திட்டத்தின் கீழ் சாவகச்சேரி பொது நூல் நிலையத்திற்கு பெறுமதிமிக்க 40 ஆங்கிலப் புத்தகங்கள் அன்பளிப்பாக கிடைத்துள்ளன.

இப் புத்தகங்கள் அடங்கிய பொதி திருகோணமலையில் உள்ள வடக்கு - கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பணிமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக கொழும்பில் உள்ள தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபையின் பணிப்பாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

அத்துடன் உள்ளூரில் பிரசுரமான 5ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தகங்களை 50 வீத கழிவுடன் கொழும்பில் உள்ள தேசிய நூலக புத்தக நிலையத்தில் (National Library book shop) பெற்றுக் கொள்ளலாமெனவும் அறிவித்துள்ளார். (ம-117)

## வகுப்பறை கட்டடங்கள் திறப்பு விழா

தென்மராட்சி,ஜன.23

சாவகச்சேரி மகளிர் கல்லூரிக்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலயத்தினால் ஐந்து லட்சம் ரூபா செலவில் கட்டைவேலி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை வளவில் அமைக்கப்பட்ட இரண்டு தற்காலிக வகுப்பறைத் தொகுதிக் கட்டடங்கள் இன்று காலை 10.30மணிக்கு வைபவ ரீதியாக திறந்து வைக்கப்படவுள்ளன.

அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் தூதுவராலய யாழ்.மாவட்ட தலைமை வெளிக்கள உத்தியோகத்தர் செல்வி மோகன் மொறிஸ், தென்மராட்சி பிரதேச செயலர் பு.சுந்தரம்பிள்ளை ஆகியோர் கட்டடங்களைத் திறந்து வைப்பர் என கல்லூரி அதிபர் திருமதி சி.சிவநாதன் தெரிவித்தார். (ம-117)

# ரயில்களில் பெண்களுக்கு இனித் தனியான பெட்டிகள்!

கொழும்பு,ஜன.23

சகல ரயில்களிலும் பெண்களுக்கெனத் தனியான பெட்டிகள் ஒதுக்கப்படும்.

- இவ்வாறு தெரிவித்திருக்கிறார். பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன.

நேற்று முன்தினம் கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர் மகாநாட்டிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

அரசாங்கத்தின் நூறுநாள் துரித அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் போக்குவரத்து நெடுஞ்சாலைகள், சிவில் போக்குவரத்துச் சேவைகள் அபிவிருத்தி செய்யப்பட இருக்கின்றன.

ரயில் போக்குவரத்தில் ஏற்படும் தாமதத்தினைத் தடுப்பதற்காக மேலும் நான்கு புதிய ரயில்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன. அத்துடன் மேலதிக பஸ்சேவைகளும் இடம்பெறவுள்ளன.

விமானப் போக்குவரத்து தனியார் துறையினரின் உதவியுடன் அபிவிருத்தி செய்யப்பட இருக்கிறது. கட்டுநாயக்க விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்பட்டு விரைவில் மத்திய விமான நிலையமாக உருவாக்கப்படும்.

இவ்வாறு அவர் மேலும் தெரிவித்திருந்தார். (ம-4-ரி)

## விவசாயிகளுக்கு கடன் வசதி

அச்சுவேலி,ஜன.23

அச்சுவேலி வடக்கு விவசாயிகள் சம்மேளனம் 12 விவசாயிகளுக்கு இலங்கை வங்கி ஊடாக விவசாயக் கடன் வசதியை பெற்றுக் கொடுத்துள்ளது.

விவசாயிகள் பயிரிடும் காலத்தில் தமது விவசாயத் தேவைக்கு இந்தக் கடனைப் பெற்று அறுவடைக் காலத்தில் திருப்பிச் செலுத்தும் நடைமுறையில் இந்தக் கடன்வசதி வழங்கப்படுகின்றது.

15ஆயிரம் ரூபா தொடக்கம் 20 ஆயிரம் ரூபா வரை பெறக்கூடிய இந்தக் கடன்வசதியை அச்சுவேலி வடக்கு விவசாய சம்மேளனம் மூன்றாவது தடவையாக விவசாயிகளுக்கு பெற்றுக்கொடுத்திருப்பதாக செயலாளர் தெரிவித்தார். (ம-11)

## உள்ளூராட்சி தேர்தற் பணிகள் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஜன.23

மார்ச மாத இறுதிப்பகுதியில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தற் பணிகள் யாழ். செயலக தேர்தல் அலுவலகத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (ம-10)


கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கம்

மாண்புமிகு அமைச்சருக்கு வாழ்த்தும் பாராட்டும்

மாண்புமிகு தியாகராசா மகேஸ்வரன் அவர்கள்

இந்து கலாசார அமைச்சராகியதை
நாம் வாழ்த்துகின்றோம்.
அவர்களின் உடனடி நடவடிக்கைகளை
நாம் பாராட்டுகின்றோம்.
வாக்குறுதிகள் சாதனைகளாகப் பிரார்த்திக்கின்றோம்.

கலாசாரக் கூட்டுறவுப் பெருமன்றம்,
*கட்டைவேலி - நெல்லியடி*
*ப.நோ.கூ.சங்கம்.*

(சி-20410)



அரியாலை
83 ஆவது சுதேசிய திருநாள்
கொண்டாட்ட விழா
ஆலோசனைக் கூட்டம்

*தலைவர்:* திரு.ச.உருத்திரேஸ்வரன்
*காலம்:* 27-01-2002 ஞாயிறு பி.ப. 3.00 மணி
*இடம்:* யா/கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய மண்டபம்

நிகழ்ச்சி நிரல்

- ☆ தேவாரம்
- ☆ தலைவர் உரை
- ☆ சென்ற கூட்ட அறிக்கை
- ☆ ஆண்டறிக்கை
- ☆ பொருளாளர் அறிக்கை
- ☆ சித்திர பானு வருட 83ஆவது சு.தி. கோ.விழா நிர்வாக சபைத் தெரிவு
- ☆ வேறு விடயம்
- ☆ நன்றியுரை

*அரியாலை.*

பொ.நடராசா
82ஆவது பொதுச் செயலாளர்.

முக்கிய குறிப்பு:
இக்கூட்டத்தைத் தொடர்ந்து
அரியாலை சனசமூக நிலையம்,
அரியாலை ஐக்கிய கழகம்,
அரியாலை சரஸ்வதி சனசமூக நிலையம் ஆகியவற்றின் பொதுக் கூட்டங்கள் 2002ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாக சபைத் தெரிவுக்காக இடம்பெறும். (C/20413)



பாராட்டி வாழ்த்துகின்றோம்



18.01.2002ஆம் திகதிமுதல்
பனை அபிவிருத்திச் சபையின்
புதிய தலைவராகப் பதவியேற்றிருக்கும்
திரு.பொன்னையா சிவபாதம்
அவர்களை வரவேற்று, அவர் பணி சிறக்கப்
பாராட்டி வாழ்த்துகின்றோம்.
அரியாலை ப.தெ.வ.அ.கூ.சங்க
(சி-20411) பணிப்பாளர்கள், அங்கத்தவர்கள், பணியாளர்கள்.



16ஆவது ஆண்டு சிரார்த்த தின அஞ்சலி

23-01-2002



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 20 | 20 |
| - | - |
| 09 | 01 |
| - | - |
| 1914 | 1986 |

அமரர்
பிரம்மஸ்ரீ மஹாதேவ ஐயர் தாணு ஐயர்

திதி: பூர்வபக்ஷ தசமி

பதினாறு ஆண்டுகள் மறைந்தாலும் - உங்கள்
பசுமை நினைவுகள் மறையவே மறையாது!
ஓம் சாந்தி!

*உப்புமடம் சந்தி,*
*கோண்டாவில் மேற்கு, கோண்டாவில்.*

- மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(97274)



முற்றிய சோகத்தில் மூன்றாவது ஆண்டு



| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 1967 | 1999 |
| - | - |
| 07 | 01 |
| - | - |
| 28 | 26 |

செல்வி வைரமுத்து மனோரஞ்சினி (ரஞ்சி)

*திதி:* 23.01.2002 (வளர்பிறைத் தசமி)

நன்றுநேர் நங்காய் நாளும் நன்மனோ ரஞ்சினி அம்மா!
அன்றுமோ அகிலம் விட்டீர் அதுவளர் தசமி ஆக(ச்)
சென்றுமே நின்ற தாகிச் சேர்ந்துமுன் றாண்ட தோடி
இன்றுமோ எண்ணி ஏங்க எமதுகண் சொரியும் கண்ணீர்!

பிரிவால் துயருறும்:
அப்பா, அம்மா, அண்ணா, அக்கா, தம்பிமார்,
அண்ணி, பெறாமக்கள், மருமக்கள்.

*தம்பு கடையடி,*
*சரசாலை மத்தி,*
*சாவகச்சேரி.*

(97207)



மாட்டுவண்டில்கள் மூலம் எரிபொருள் விற்போர் நேற்றுமுன்தினம் நடத்திய பேரணியின்போது எடுக்கப்பட்ட படங்கள். பேரணியாகப் புறப்பட ஆயத்தமாக நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றிலில் மாட்டுவண்டில்கள் வரிசையாக நிற்பதைப் முதற் படத்திலும் யாழ்.செயலகம்நோக்கி அணிவகுத்துச் செல்வதை அடுத்துள்ள படத்திலும் காணலாம். (படம் பொ.இராஜேஸ்வரன்)

## கௌரவிப்பு நிகழ்வு

தென்மராட்சி,ஜன.23

கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தின் புலமைப் பரிசில் திட்டத்திற்கு நிதி உதவி வழங்கியவர்கள் கௌரவிப்பும், கடந்த வருடம் நடைபெற்ற ஐந்தாம் தர புலமைப் பரிசில் பரீட்சை, ஜி.சீ.ஈ. உயர்தரப் பரீட்சை ஆகியவற்றில் சித்திபெற்ற மாணவர்களுக்கு புலமைப் பரிசில் வழங்கலும் எதிர்வரும் 27ஆம் திகதி நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும்.

சங்கத் தலைவர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.மாவட்ட உதவி கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் செ.கனகசபாபதி கலந்துகொள்வார். (க-117)

## தையல் பயிற்சி நிலையம் திறப்பு

வலி.தென்மேற்கு.ஜன.23

நவாலி வடக்கு- புலவர் வீதியில் புதிய தையல் பயிற்சி நிலையம் ஒன்று அண்மையில் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நா.வேதநாயகன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

மேற்படி புதிய பயிற்சி நிலையத்திற்கு 40 மாணவிகள் நேர்முகப் பரீட்சை மூலம் தேர்தெடுக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கு ஒருவருட பயிற்சியின் பின்னர் பரீட்சை நடத்தப்பட்டு சான்றிதழ் வழங்கப்படும் என்று பயிற்சி இணைப்பாளர் த.சிறிபதி தெரிவித்தார்.

நவாலியில் உருவாக்கப்பட்ட தையல் பயிற்சி நிலையங்களுள் இது 6ஆவது பயிற்சி நிலையம் என்பது குறிப்பிடததக்கது. (ம-185)

### அரச சார்பற்ற நிறுவனங்களில்

# சொந்த மாவட்டத்தவர்கள் பணிபுரிந்தால் கூடுதலான நன்மைகள் கிடைக்கும்

### அடைக்கலநாதன் எம்.பி. இணையத்துக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜன.23

அரச சார்பற்ற நிறுவனங்களில் அந்தந்த மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் பணிபுரிந்தால் கூடுதலான நன்மைகள் கிடைக்கும். சொந்த மாவட்ட இளைஞர்கள் தமது பகுதிகள் குறித்து அதிக அக்கறை காட்டுவார்கள்.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அ.அடைக்கலநாதன் மன்னாரில் உள்ள அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தலைவருக்கு எழுதியுள்ள கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்திலுள்ள சில பட்டதாரிகளிடமிருந்தும், படித்த இளைஞர்களிடமிருந்தும் எமக்குக் கிடைத்த தகவலின்படி வேறு மாவட்டங்களைச் சார்ந்த அரச சார்பற்ற நிறுவனங்களில் தாம் வேலை [illegible]ச் செல்லும்போது தேவையான த[illegible]தரம் இருந்தும் அந்த மாவட்டத்தைச் சார்ந்தவர்களுக்கே பதவிகள் வழங்கப்படுமெனக் கூறித் தங்களது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதாகவும், ஆனால் மன்னார் மாவட்டத்தைப் பொறுத்தமட்டில் சில அரச சார்பற்ற நிறுவனங்களில் வேறு மாவட்டங்களைச் சார்ந்தவர்களே வேலை வாய்ப்புகளைப் பெற்றுக்கொள்வதாகவும் அவர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

ஒரு மாவட்டத்தைச் சேர்ந்த அரச சார்பற்ற நிறுவனங்கள் அம் மாவட்டத்தை முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்திற்காகவே அங்கு செயற்படுகின்றன. அந்தந்த மாவட்டங்களைச் சேர்ந்தவர்கள் வேலைக்கு அமர்த்தப்படும்போது அவர்கள் தங்கள் மாவட்டத்தில் கூடுதலான அக்கறை காட்டுவார்களென்பது உறுதியானதாகும். இதனால் அந்த நிறுவனங்களின் நோக்கமும், எதிர்பார்ப்பும் நிறைவேறும்.

மேற்படி விடயங்களைத் தாங்கள் கவனத்திலெடுத்து, அரச சார்பற்ற நிறுவனங்களின் வெற்றிடங்களை, இங்கு படித்துவிட்டு வேலையற்றிருக்கும் தகுதி படைத்த இளைஞர்களைக்கொண்டு நிரப்புவதற்கு ஆவனசெய்யவேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

- இவ்வாறு அந்தக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### பருத்தித்துறையில் திடீர் சோதனை

# கள்ளக் 'கரண்ட்' எடுத்த எண்மர் சிக்கிக்கொண்டனர்

யாழ்ப்பாணம்,ஜன.23

இலங்கை மின்சார சபை பருத்தித்துறைப் பிரிவினர் அண்மையில் மேற்கொண்ட திடீர்ப் பரிசோதனையில் சட்டவிரோதமாக மின்சாரம் பெற்ற எட்டுப்பேர் வசமாக மாட்டிக் கொண்டனர்.

இவர்களிடமிருந்து பெருமளவு வயர்கள் பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

பருத்தித்துறை ஓடக்கரைப் பகுதியில் ஒருவரும், இரண்டாம் குறுக்குத்தெருவில் இருவரும், பருத்தித்துறை மேற்கில் ஒருவரும், பருத்தித்துறை கிழக்கு, கூவில் ஆகிய பகுதிகளில் தலா இருவருமாக மொத்தம் எட்டுப்பேர் அகப்பட்டனர்.

இவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக மின்சார சபை வட்டாரங்கள் தெரிவித்தன.(க-117)

## மெய்வண்மைப் போட்டி

தென்மராட்சி,ஜன.23

பருத்தித்துறை சென்.தோமஸ் பெண்கள் பாடசாலையின் மெய்வன்மைப் போட்டிகள் எதிர்வரும் 26ஆம் திகதி சனிக்கிழமை கலட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மைதானத்தில் அதிபர் அருட்சகோதரி அன்ரனீற்றா மார்க் தலைமையில் நடைபெறும்.

போட்டிக்குப் பிரதமவிருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமியும், சிறப்பு விருந்தினர்களாக அருட்திரு. மதிருதயதாஸ் அடிகள், வடமராட்சி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் ஆ.இராசேந்திரன் ஆகியோரும் கலந்துகொள்வர். (க-117)

## நுளம்பினால் மூதாட்டிக்கு நேர்ந்த விபரீதம்

யாழ்ப்பாணம்,ஜன.23

நுளம்பை விரட்டுவதற்கு புகையிடுவதற்காக தீமூட்டிய வேளையில் உடையில் தீப்பற்றிக் கொண்டதால் மூதாட்டி எரிகாயங்களுக்கு இலக்கான சம்பவம் கடந்த ஞாயிற்றுக் கிழமை இரவு தொண்டமனாறு கெருடாவில் கிழக்கில் இடம்பெற்றது.

- இதே இடத்தைச்சேர்ந்த செல்வராசா கண்மணி (வயது 68) என்னும் மூதாட்டி பலத்த எரிகாயங்களுக்கு இலக்காகி, மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்திய சாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். (க-117)

## மின் விநியோகத்தில் பாரபட்சமா?

வடமராட்சியில் வியாபாரிமூலை தொடக்கம் தொண்டமனாறு வரையான கரையோரப் பகுதிக்கு வழங்கப்படும் மின்சார விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுகின்றதா என்று அப்பகுதி மக்கள் கேள்வி எழுப்பியுள்ளனர்.

தொண்டமனாறு, பொலிகண்டி, வியாபாரிமூலை ஆகிய இடங்களில் உள்ள ஜெனரேற்றர்கள் மூலம் இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கப்படுகின்ற போதிலும் மின் விநியோகத்தில் பாரபட்சம் காட்டப்படுவதாகத் அப்பகுதியைச் சேர்ந்தவர்கள் முறைபாடு தெரிவிக்கின்றனர். (க-117)

## தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி

கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் நடத்தப்படும் மாதர் அபிவிருத்தி நிலைய தையல், மனையியல் டிப்ளோமா பயிற்சி நெறியின் ஆரம்ப வைபவம் புலோலி குரும்பைகட்டி சனசமூக நிலையத்தில் இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு கிராம உத்தியோகத்தர் எஸ்.நாகசோதி ரூபன் தலைமையில் நடைபெறும். இவ்வைபவத்துக்கு பருத்தித்துறை பிரதேச செயலர் ஆ.சிவசுவாமி பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். (க-173)

# மகளிர் தினத்தையொட்டி கட்டுரைப் போட்டிகள்

வலிகாமம் தெற்கு,ஜன.23

அனைத்துலக மகளிர் தினத்தை முன்னிட்டு வலிகாமம் கல்வி வலய பாடசாலை மாணவர்களிடையே கட்டுரைப்போட்டி நடைபெறவுள்ளது.

நமது நாட்டில் மகளிர் மீதான வன்முறைகள், மகளிர் உரிமைகள், மகளிர் சாசனம் ஆகியவற்றை உள்ளடக்கியதாக இக்கட்டுரைப் போட்டி அமைந்திருக்கும்.

பிரிவு 1 (தரம் 6,7), பிரிவு 2 (தரம் 8,9), பிரிவு 3 (தரம் 10,11) ஆகிய மூன்று பிரிவுகளாக நடைபெற உள்ள இக்கட்டுரைப்போட்டி பெப்ரவரி மாதம் 20ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் இரண்டு மணிக்கு பின்வரும் இடங்களில் நடைபெறும்.

★ சங்கானைக் கோட்டம் - வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி.

★ சண்டிலிப்பாய்க் கோட்டம் - மானிப்பாய் இந்துக் கல்லூரி.

★ உடுவில் கோட்டம் - மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி.

★ தெல்லிப்பழைக் கோட்டம் - மல்லாகம் மகாவித்தியாலயம்.

(ம-152)

### விடத்தற்பளை கமலாசினி வித்தியாலய

# மாணவர் மரநிழலின் கீழே அமர்ந்து கல்வியைத் தொடரும் அவல நிலை

தென்மராட்சி,ஜன.23

கடந்தவாரம் மீண்டும் ஆரம்பிக்கப்பட்ட விடத்தற்பளை கமலாசினி வித்தியாலயத்தில் கல்விகற்கும் மாணவர்கள் அடிப்படை வசதிகள் அற்றநிலையில் கல்வியைத் தொடர்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வித்தியாலயத்தில் தற்போது 225 மாணவர்கள் இணைந்துள்ளபோதிலும் 75 மாணவர்களுக்குத் தேவையான தளபாடங்கள் மட்டுமே பாடசாலையில் உள்ளது. ஏனைய மாணவர்கள் மரநிழலில் தரையில் இருந்தே கல்வி கற்பதாகவும் -

இங்கிருந்த ஆறு வகுப்பறைத் தொகுதிகளில் மூன்று தொகுதிகளே தற்போது இயங்கக்கூடிய நிலையில் உள்ளதாகவும் -

ஏனைய கட்டடங்களும், ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தினரால் அமைக்கப்பட்டிருந்த மலகூடமும் சேதங்களுக்கு இலக்காகியுள்ளதாகவும் -

வித்தியாலயம் இயங்கத் தொடங்கி பத்து நாள்களுக்கு மேலாகியும் கல்வித்திணைக்கள அதிகாரிகள் எவரும் வந்து நிலைமையை நேரில் பார்வையிடவில்லை எனவும் -

பாடசாலை அபிவிருத்திச் சபைச் செயலாளர் மா.பரமேஸ்வரன் தெரிவித்தார். (ம-117)

## ஏழாலை ஸ்ரீ வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய சிறப்புமலர்த் தொடர்ச்சி...

**குருக்களின் ஆசி....**

**'இன்று இவ்வாலயம் ஓர் அழகிய தேரைக் காண்கின்றது**

தேரின் தோற்றத்தை மனதில் சிறிது சிந்தித்துப் பார்ப்போமாயின் அதன் முழு ஆகிருதியும் கொளுந்துவிட்டு சுவாலித்து எரியும் அக்கினியின் அமைப்புக்கு ஒத்திருப்பதைக் காணலாம். இக்கருத்தினை உள்ளடக்கி "சாற்றியிடும் அங்கியிலே சங்காரம்" எனக்கூறப்பட்டது. இறைவன் திருக்கரத்தேயுள்ள அக்கினி சங்காரத்தைக் குறிப்ப தாகும்.

முப்புரங்களையும் அழிப்பதற்குப் புறப்பட்ட பரம்பொருள் பூமியே தேராகவும், சூரிய, சந்திரரே அதன் சில்லுகளாகவும், நான்கு வேதங்களும் இழுக்கும் குதிரைகளாகவும் அமைய அதில் எழுந்த ருளிச் சென்றது உலகம் முழுவதும் தம்முள் அடக்கம் என்பதை உணர்த்துகின்றது. பிரபஞ்சம் முழுவதும் பீடசக்தியாகவும் அதிலுள்ள அகில சராசரங்கள் இறைவனது உருவத்திருமேனியாகவும் அவற்றுள் மறைந்திருப்பதே சிவசொரூபம் என்ற நினைவுடன் இரதத்திலே இறைவனை நாம் தரிசிப்பதனால் சிறந்தபயனை அடையலாம்.

வேதத்திலே இரதத்தைப் பற்றிச் சொல்லியிருப்பன பின்வரு மாறு:-

*தஷத்ப்யோ ரதகாரேப்யச்ச வோநம.*

*ததேப்யோ - ரதபதிப்பியச்ச வோநம.*

பெருமரங்களை வெட்டிச் சிறுதுண்டுகளாக ஆக்கித்தருபவர் தச்சன் ; சிற்ப சாத்திர நுணுக்கப்படி அவைகளை உருவாக்குபவன் சிற்பாசாரி ; அதனால் அமைந்தது தேர்.

அதில் வீற்றிருப்பவள் சக்தி, இறைவன்.

இதனையே இந்த மந்திரம் விளக்குகின்றது.

பிரபஞ்சத் தேரை அமைக்கும் தச்சனாகவுள்ள சிவபரம் பொருளுக்கு வணக்கம். பல பல உருவங்கள் · பல்லாயிரம் யோனி பேதங்களை உருவாக்கி, உருவாக்கும் உயிரினங்களின் தலைவனான சிற்பாசாரி வடிவமான சிவசக்திக்கு வணக்கம்.

தேரில் ஏறும் நாகபூஷணி அம்பாளுக்கு வணக்கம்.

2002இல் நாடு சுபீட்சமடையவும் நாமெல்லாம் திருக்கேதீஸ்வரம், கோணேஸ்வரம், கதிர்காமம், நகுலேஸ்வரம் தரிசிக்கவும் தரைவழிப்பாதை திறக்கவும் தைப்பூசத்திலே வழிதிறக்கும் காட்சியை தேரோடும் காட்சியாகக் காண்போமாக.

**தியாக கெங்காதரக்குருக்கள்.**
புன்னாலைக்கட்டுவன்.

**தெய்வீகம் நிறைந்த......**

அம்பாளுக்குப் புதிதாக ஒரு சித்திரத்தேர் அம்மன் தாயாரின் ஊக்கத்தால் உருவாகி இருக்கின்றது. அத்தேர் ஓடும் திருக்கோயில் வீதியும் செப்பனிடப்பட்டுள்ளது. புதிய சித்திரத்தேர் இன்று வெள்ளோட்டம். எதிர்வரும் (27.01.2002) ஞாயிற்றுக்கிழமை அன்னை புதிய சித்திரத்தேரில் வீதியுலாவந்து அடியார்களிற்கு அருள் பாலிப்பா. இந்நாள் ஏழாலை களபாவோடை வசந்த நாகபூஷணி அம்பாள் ஆலய சரித்திரத்தில் பொன் எழுத்திற் பொறிக்கும் சிறப்புக்கு உள்ளது.

நல்லன எல்லாவற்றையும் அடியார்களுக்கு வாரிவழங்குகின்றாள் ஏழாலை களபாவோடையில் எழுந்தருளி இருந்து அருள்பாலிக்கும் தயார் வசந்த நாகபூஷணி அம்மை. தாயை நாம் அனைவரும் மனதில் இருத்தி, உலகம் உய்யும் பொருட்டு பிரார்த்திப்போமாக.

தெய்வசித்தன் லயன் **திரு.இ.நடராசா**
*தலைவர், ஒடயம்பதி கற்பக விநாயகர் ஆலயம், உரும்பிராய்.*

**வெண்ணீறும் வேப்பிலையும்......**

அமைக்க முனைந்தார். ஆலயம் அழகுற அமைக்கப்பட்டது. பரிவார மூர்த்திகள் உள்ளடங்கலாக ஆலயம் பொலிவுற்றது. மஹா கும்பாபிஷேகம் மகத்தானமுறையில் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து வருடாந்த உற்சவமும் சிறப்பானமுறையில் நடைபெறலாயிற்று.

**அருள் பொழியும் விழா**

அம்பிகையின் மகத்துவம் அம்மன் தாயார் மூலம் வெளிப்பட்டு, இலங்கை முழுவதும் பரவி வெளிநாடுகளுக்கும் பரவலாயிற்று. பக்தர் குழாம் பெருகியவண்ணம் இருந்தது. பக்தர்களை மழையிலும் வெயிலிலும் காக்கவைத்து வருத்தமுறச் செய்வாளா அன்னை? ஆலயம் விஸ்தீரண மாக்கப்படவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. பக்தரின் உதவிகளும் நன்கொடைகளும் அவற்றிற்கு உறுதுணையாக அமைந்தது. ஆலயத்தைச் சூழவிருந்த நிலங்கள் ஆலயத்துக்கே அர்ப்பணமாகின. இவ்வாறு பெருங்கோயிலாக இன்று மலர்ந்துள்ளது.

வருடாந்த உற்சவத்தின் சிறப்புக்காக சித்திரத் தேர், தீர்த்தக் குளம் முதலியனவும் அமைக்கப்பட்டுள்ளது. இத்தகு மேன்மைமிக்க அம்பிகையின் அருளாசிகளைப்பெற்று, அகிலலோக மாதாவாம் நாகபூஷணி அம்பிகைக்குத் திருத்தொண்டுகள் செய்யும் பெரும்பேறு பெற்றமையைப் பெரும்பாக்கியமாகக் கருதுகிறேன். அன்னையின் அருளாசிகள் எங்கும் வியாபித்து, சாந்தியும் சமாதானமும் நிலவ அன்னை அருள்பாலிக்க வேண்டும் என்று உளமாரப் பிரார்த்திக்கிறேன்.

**பொது நூலகம்**
வலி.வடக்கு பிரதேச சபை, காங்கேசன்துறை.

# CENTRE FOR PERFORMING ARTS

**(THIRUMARAI KALAMANRAM)**

WORK - SHOPS
ON
WESTERN DRAMA AND THEATRE
Learn the art, Style and
techniques of the English theatre at
THE
'WORK - SHOPS'
Apply before the 31st of January 2002
All work - shops will be conducted in English
conducted by Thirumarai Kalamanram

*238, Main Street,*
*Jaffna.*
*T.P. 021 - 2393*
*Internet: www.cpateam.org*

General Secretary
Centre for Performing Arts

(C/20429)


## 6ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 09 . 07 . 1942

மறைவு 30 . 01 . 1996

அமரர்

### குமாரசாமி இராசரத்தினம்

(முன்னாள் ஆய்வுகூட உதவியாளர் - ஹாட்லி கல்லூரி, சயன்ஸ் சென்ரர், மொடேர்ன் கல்வி நிலைய உரிமையாளர்)

திதி:23.01.2002

எண்ணொடு எழுத்துமுய்ய எழிலுறு கழகங்கண்டாய்
மண்ணொடு பொன்னுமாக வளமெல்லாம் தந்தாய் தேவே
கண்ணொடு மணியாய் நின்ற அண்ணலே பிரிவேன் தந்தாய்
விண்ணொடு சஷ்டியப்தம் வேதமான விடியலே எங்கு
காண்போம்?

*மொடேர்ன் கல்வி நிலையம்,*
*நெல்லியடி.*

மனைவி, மகன், மருமகள்,
பேரப்பிள்ளைகள்.

(C/20427)

## கலந்துரையாடல்

யாழ்மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கத்தினரால் தெரிவுசெய்யப்பட்டுள்ள 17 வயதுக்குட்பட்ட பெண்கள அணிக்கும், 21 வயதுக்குட்பட்ட பெண்கள் அணிக்கும் நாளை வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரியில் கலந்துரையாடல் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் கூடைப்பந்தாட்ட அணிக்குத் தெரிவு செய்யப்பட்ட அனைத்து வீராங்கனைகளையும் தவறாது சமுகம் அளிக்குமாறு யாழ்.மாவட்ட கூடைப்பந்தாட்ட சங்கம் அறிவித்துள்ளது.
(ஐ-6)

## சங்காபிஷேகம்

இணுவில் சிவகாமி அம்மன் கோயிலில் மணவாளக் கோலத்தையொட்டி நாளை காலை 8 மணி முதல் சங்காபிஷேகம் இடம்பெறவுள்ளது. தொடர்ந்து 48 தினங்கள் அபிஷேகம், விசேட பூசை என்பன இடம பெறவுள்ளன.
(ஐ-3)


புதிய
## மனையியல் பயிற்சிகள்

**28.01.2002**
திங்கள் 10.00 மணிக்கு
ஆரம்பமாகின்றன.

- ★ தையல், ஐசிங், பூவேலை, Hair Style,Cookery, துணிப் பெயின்ரிங், ஓவியம், புகைப்படக்கலை
- ★ ஒரு பயிற்சிக்கு இன்னொன்று இலவசம்
- ★ தனி ஒரு பயிற்சியிலும் கலந்துகொள்ளலாம்.
- ★ 3மாத பயிற்சி ஒன்றுக்கு முழுக்கட்டணம் ரூ.350/= மட்டுமே
- ★ பயிற்சி முடிவில் கண்காட்சியுடன் சான்றிதழ் வழங்கல்
- ★ இரு வாரத்திற்கொருமுறை இலவச தொழில் வழிகாட்டிச் செயன்முறை வகுப்பு நடைபெறும்.

### தூரிகை
செங்குந்தா வீதி,
கல்வியங்காடு.

(97430)


# கேள்வி அறிவித்தல்

## வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலகம்

1. வல்வெட்டித்துறை மீன்சந்தைக் கட்டடம் நிர்மாணித்தல் (கட்டம் II) வேலைக்கான கேள்விகள் வல்வெட்டித்துறை நகராட்சிமன்றத் தலைவரினால் 2002 ஆம் ஆண்டு மாசி மாதம் 8 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும். பெறப்பட்ட கேள்விகள் அன்றைய தினம் மு.ப. 11.00 மணிக்குத் திறக்கப்படும்.

2. நிர்மாணப் பயற்சி நிறுவனத்தில் இக்ராட் (ICTAD) கட்டடங்கள் நிர்மாணிப்பதற்குக் கீழே குறிப்பிடப்படும் தரங்களையுடைய, அதற்கு மேல் பதிவுசெய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் மட்டும் கேள்விப் பத்திரங்கள் கோருவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

3. ஒப்பந்தப் பத்திரங்களைப் பெறுவதற்கு முன்னர் நிர்மாணப் பயிற்சி நிறுவனத்தினரால் வழங்கப்பட்டதும், இற்றைவரை செய்யப்பட்டதுமான பதிவுப் புத்தகத்தை அலுவலகத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

4. தகுதியுடையோர் மட்டும் கீழ்க் காணும் அட்டவணைப் பிரகாரம் உரிய கட்டணங்களை வல்வெட்டித்துறை நகராட்சிமன்ற அலுவலகத்தில் செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெற்று, கேள்விப்பத்திரங்களை 2002 ஆம் ஆண்டு மாசி மாதம் 5 ஆம் திகதி பி.ப. 3.00 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

| வேலை விவரம் | பதிவுசெய்த தரம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப் பணம் | மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப் பணம் |
|---|---|---|---|
| வல்வெட்டித்துறை மீன் சந்தைக் கட்டடம் நிர்மாண வேலை (கட்டம் II) | எம் - 8 | 18,800/- | 500/- |

5. கேள்வி கோருபவர் ஒருவருக்கு ஒருதொகுதி ஆவணங்கள் மட்டும் விநியோகிக்கப்படும்.

6. கேள்வி ஆவணங்களை இலவசமாகப் பார்க்கலாம். மேலதிக விவரங்களை வல்வெட்டித்துறை நகராட்சி மன்ற தலைவரிடமிருந்து வேலைநாள்களில், அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

*நகராட்சி மன்ற அலுவலகம்,*
*வல்வெட்டித்துறை.*
*21-01-2002*

சு.சந்திரசேகரம்,
உபதலைவர்,
நகராட்சி மன்றம்,
வல்வெட்டித்துறை.

(C/20426)

# கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் ஆசிரியர்
**கந்தையா ஸ்ரீகந்தவேள்**
அவர்களின் அன்புத் தந்தையார்

## செல்லையா கந்தையா

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு ஆழ்ந்த கவலையில் இருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர்கள், ஆசிரியர்கள்,
அலுவலக ஊழியர்கள்.
**யா/யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை.**
**யா/பொன் பரமானந்தர் மகா வித்தியாலயம், குரும்பசிட்டி.**

(97435)

# கண்ணீர் அஞ்சலி

தெல்லிப்பழை கால்நடை வைத்தியர்
**டாக்டர் திரு.பொன்னுத்துரை மகாதேவன்** அவர்களின்
அன்புச் சகோதரர்

## பொன்னுத்துரை மனமோகன் *(சாந்தன்)*

அவர்களின் மறைவையிட்டு நாம் பெரிதும் கவலை அடைகின்றோம். அவரது பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு நாம் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

*அன்னாரது ஆத்மா சாந்தி அடைவதாக!*
*ஓம்சாந்தி!*

(97424)

- தெல்லிப்பழை
கால்நடை வைத்திய காரியாலய உத்தியோகத்தர்கள்.

# மரண அறிவித்தல்கள்

## செல்வி மனோரஞ்சினி கந்தையா (ரஞ்சி)

கொழும்புத்துறையைச் சேர்ந்த செல்வி மனோரஞ்சினி கந்தையா நேற்று (22.01.2002) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதியினரின் அன்புப் புதல்வியும் தபோநிதி, ஜெகதீசன், சத்தியபாமா, சகுந்தலா, தணிகாசலம், புஸ்பராணி, சிவபாலன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2002) புதன்கிழமை காலை 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கோம்பையன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*261/8, கொழும்புத்துறை வீதி,*
*கொழும்புத்துறை மேற்கு.*

தகவல்:
தபோநிதி வாமதேவன்
(சகோதரி)

(97423)

## இளையவர் கந்தையா

(நன்னொழுக்க சிறுவர் பரிபாலன சேவைத் திணைக்களத்தின் ஓய்வுபெற்ற கணக்காளர்)

பலாலியைப் பிறப்பிடமாகவும் கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட இளையவர் கந்தையா நேற்று (22.01.2002) செவ்வாய்க்கிழமை கா[illegible]மாகிவிட்டார்.

அன்னார் இராசம்மாவின் அன்புக் கணவரும் ஞானசேகரன் (ஈசன்ஸ் அந்தியகால சேவை, முகாமையாளர் - கோப்பாய்), நிர்மலா, காலஞ்சென்ற குணசேகரம் (குணம் ஆட்ஸ் உரிமையாளர்), மேகலா, அஞ்சலா (லண்டன்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும் சண்முகவடிவேல், ஸ்கந்தரூபன் (லண்டன்), நவமணி ஆகியோரின் அன்பு மாமனாரும் மயூரி, மதுஷா, சோபிகா, வினோஜா, சர்மிலன் ஆகியோரின் பேரனாரும் மாணிக்கராஜா, காலஞ்சென்ற கிருஷ்ணன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2002) புதன்கிழமை நடைபெற்றுப் பூதவுடல் பிற்பகல் 2.00 மணியளவில் தகனக்கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கோப்பாய்.*

தகவல்:
க.ஞானசேகரன்
(மகன்)

(97437)

## இராசையா கந்தையா

*(இளைப்பாறிய அதிபர்)*

*(கொக்குவில் இராமகிருஷ்ண சைவ வித்தியாசாலை, நாவற்குழி மகா வித்தியாலயம் ஆகியவற்றின் முன்னாள் அதிபர், அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம், அகில இலங்கை காந்தியசேவா சங்கம் ஆகியவற்றின் முன்னாள் தலைவர்)*

கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் கொட்டாஞ்சேனையை வசிப்பிடமாகவும் கொண்ட இராசையா கந்தையா 21.01.2002 திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற இராசையா தம்பதியரின் சிரேஷ்ட புதல்வரும் காலஞ்சென்ற தம்பையா தம்பதியரின் மருமகனும் இளைப்பாறிய ஆசிரியை திருமதி சொர்ணம்மாவின் (பழையக்கா) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான செல்வராஜா, சிவபாக்கியம், துரைசிங்கம் மற்றும் செல்லையா, இராசதுரை ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகராஜா, திருமதி சுந்தரம், நாகரத்தினம், இராஜரட்ணம் ஆகியோரின் மைத்துனரும் இரவீந்திரன் **(Chartered Accountant; Spartan Press** உரிமையாளர் - கொழும்பு); உமாராணி (லண்டன்), நரேந்திரன் (லண்டன்), சுகீந்திரன் (லண்டன்), நந்தினி (தென்னாபிரிக்கா), கமலினி (கனடா) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், கீதா, நிற்குணன், துஷியந்தி, அருணா, மகேசன், குமரேந்திரன் ஆகியோரின் அன்பு மாமனாரும் அநந்தகி, ஆரணி **(Doctor)**, தாரணி **(Doctor)**, சுதர்ஷனா, பிரியதர்ஷனா, பிரவணன், பிருந்தா, மயூரிக்கா, யாழினி, மயூரதன், ஹரிஹரன், வித்தியா ஆகியோரின் அன்புப் பாட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/2,Mayfield Road,
Colombo-13.
Telephone: 325226,335786.

*இராசையா செல்லையா (தம்பி)*
*'கருணகிரி'*
*செம்பியன் லேன்,*
*கொக்குவில்.*

தகவல்:
க.இரவீந்திரன்
(மகன்)

(97432)

## நுணாவில் பாடசாலைகள் மட்டுவில் தெற்கு சரஸ்வதியில் இயங்கும்

யாழ்ப்பாணம்,ஜன.23

நுணாவில் கிழக்கு அமிர்தாம்பிகை வித்தியாலயம், நுணாவில் மேற்கு அ.த.க.பாடசாலை ஆகியவற்றை மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் இயங்க வைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா தெரிவித்துள்ளார்.

இதன்படி மேற்படி பாடசாலைகளில் கல்விகற்க விரும்பும் மாணவர்கள் நாளை வியாழக்கிழமை தொடக்கம் காலை 9 மணிமுதல் 12 மணிவரை தமது பதிவுகளை மட்டுவில் தெற்கு சரஸ்வதி கனிஷ்ட வித்தியாலயத்தில் மேற்கொள்ளுமாறு அவர் மேலும் தெரிவித்துள்ளார். (க-8)

## தென்மராட்சி அதிபர்களுக்குக் கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.23

தென்மராட்சி கல்வி வலய அதிபர்களுக்கான கூட்டம் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

தற்போது உள்ள மாணவர்கள், ஆசிரியர்களின் விவரத்துடன் அதிபர்கள் அனைவரையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (க-8)

## விடைத்தாள்கள் கொழும்புக்கு

யாழ்ப்பாணத்தில் கடந்த சில தினங்களாக இடம்பெற்றுவந்த ஜி.சீ.ஈ. சாதாரணப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பிடும் பணிகள்யாவும் நேற்றுடன் முடிவடைந்தன. விடைத்தாள்கள் நாளை வியாழக்கிழமை செஞ்சிலுவைச் சர்வதேச குழுவின் கப்பல் மூலம் கொழும்புக்கு எடுத்துச் செல்லப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-8)

## இலக்கத்தகடு பெற மோ.சைக்கிளுடன் நேரில் வாருங்கள்!

யாழ்ப்பாணம்,ஜன.23

யாழ்.செயலகத்தின் மோட்டார் பதிவுத் திணைக்களத்தில் தமது மோட்டார் சைக்கிள்களுக்கான இலக்கத் தகடுகளைப் பெற வருவோர் மோட்டார் சைக்கிளையும் அதற்குரிய புத்தகத்தையும் எடுத்துவருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

NPGA தொடக்கம் NPGH வரையான இலக்கத் தகடுகள் மட்டுமே செயலகத்தில் இருப்பதாகவும், உரியவர்கள் அவற்றை வெள்ளிக்கிழமைகளில் வந்து பெற்றுக்கொள்ளுமாறும தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-10)

## விளையாட்டு நிகழ்வுகள்

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான பெண்களுக்கான கபடி விளையாட்டுப் போட்டி இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம் பெறவுள்ளது. (ம-86)

☆ ☆ ☆

நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட விளையாட்டுக்கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் கலந்து கொள்ளும் அணிகள் வருமாறு:-

திருநெல்வேலி மகாத்மாஜி வி.க. எதிர் பொற்பதி வி.க.

நல்லூர் சீசொக்ஸ் வி.க. எதிர் ஒலிம்பிக் வி.க. (ம-86)

☆ ☆ ☆

வலி.வடக்கு தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையேயான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று புதன் கிழமை பிற்பகல் 3.30மணிக்கு மல்லாகம் ஸ்ரீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் இடம்பெறவுள்ள கால் இறுதி ஆட்டத்தில் கலந்துகொள்ளும் அணிகள் விவரம வருமாறு:-

தெல்லிப்பழை நாமகள் வி.க.எதிர் அளவெட்டி கலைவாணி வி.க.

அளவெட்டி டயானா வி.க. எதிர் மல்லாகம் கிராம அபிவிருத்திச் சங்க வி.க. (ம-86)

# அனைவரும் இதயசுத்தியுடன் செயற்பட்டு நாட்டில் சமாதானத்தை மலரச் செய்வோம்

## பொங்குதமிழ் நினைவு நிகழ்வில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம்,ஜன.23

கடந்த 20 வருடங்களுக்கு மேலாக நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தால் எமது மக்கள் அனுபவித்துவரும் துன்ப துயரங்களை இல்லாதொழிக்க நாட்டில் நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் வெற்றிபெறச் செய்யவேண்டும்.

தற்போதைய சமாதான முயற்சிகளுக்குப் பெரும் முட்டுக்கட்டைபோடாது எல்லோரும் ஒன்றிணைந்து இதயசுத்தியுடன் செயல்படுவதன் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தை மலரச்செய்யவேண்டும்.

- இவ்வாறு யாழ்.பல்கலைக்கழகத் துணைவேந்தர் பொ.பாலசுந்தரம்பிள்ளை தெரிவித்தார்.

கடந்த 17ஆம் திகதி யாழ்.பல்கலைக்கழக முன்றிலில் எழுச்சிபூர்வமாக நடைபெற்ற பொங்குதமிழ் நினைவு நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது:-

நாட்டில் நடைபெற்றுவரும் யுத்தத்தால் எமது பிரதேசத்தைச் சேர்ந்த 5 லட்சம் மக்கள் பல்வேறு நாடுகளுக்கும் இடம்பெயர்ந்து சென்றுள்ளனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் பொருளாதார ரீதியில் வளம்பெற்றிருந்தாலும் உளவியல் ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் ஆயிரக்கணக்கான மக்கள் தமது சொந்தஇடங்களில் இருந்து இடம்பெயர்ந்து உள்நாட்டிலேயே பெரும் கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

எமது மக்களின் கஷ்டங்களைத் தீர்ப்பதற்கு நாட்டில் நிரந்தர சமாதானம் மலரவேண்டும். எமது கடந்த கால வரலாற்றைத் திரும்பிப்பார்த்தால் -

பருத்தித்துறையில் இருந்து பொத்துவில்வரை எமது மக்களே காலம் காலமாக வாழ்ந்துவந்தார்கள்; வாழ்ந்தும் வருகின்றார்கள். இந்தப் பகுதியிலேயே இன்று தமிழ் மொழி அமுலாக்கலுக்கு பெரும் பிரச்சினைகள் ஏற்படுகின்றன.

நூறுவீதம் தமிழ் மக்கள் வாழும் குடா நாட்டில் கூட, பொலீஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்யச் சென்றால் அங்கு சிங்களத்திலேயே அந்த முறைப்பாடு பதிவு செய்யப்படுகிறது.

எமது பகுதியிலேயே தமிழ் மொழி புறக்கணிக்கப்படுகிறது.

எந்த ஒரு சமூகமும் தமது மொழி, கலாசாரம், சுயநிர்ணயம் தொடர்பாக உரிமை கோருவது ஐக்கிய நாடுகள் சபை பிரகடனத்தின்படி சட்டத்திற்கு முரணானது அல்ல.

இதனடிப்படையில் கடந்த வருடம் எமது பல்கலைக்கழக சமூகத்தால் முன்னெடுக்கப்பட்ட பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் மூலம் மரபுவழித் தாயகம், சுயநிர்ணய உரிமை, தேசியத்தை அங்கீகரித்தல் ஆகிய எமது மக்களின் மூன்று அபிலாஷைகளையும் வெளிப்படுத்தினோம்.

இந்த எழுச்சி நிகழ்வானது நாட்டில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தியது.

சமாதான முயற்சிகளுக்கு அனைத்து சமூகமும் ஆதரவு வழங்குவதன் மூலமே நாட்டில் நிலையான சமாதானத்தை ஏற்படுத்தமுடியும்.

- இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவர் எஸ்.கஜேந்திரன், கலைப்பீடாதிபதி பேராசிரியர் கோபால்கிருஷ்ணஐயர், சமூகவியல் துறைத்தலைவர் கலாநிதி சண்முகலிங்கன், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் கிருஷ்ணராசா, பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தலைவர் கலாராஜ், பல்கலைக்கழக எழுதுவினைஞர் சங்கத்தின் பிரதிநிதி ஆகியோரும் உரையாற்றினர். (க-6-180)

## கற்கள் பறித்தும் திருத்தப்படாத வீதி!

சண்டிலிப்பாய்,ஜன.23

பிரான்பற்று முல்லையடியிலிருந்து சங்கானைக்குச் செல்லும் வீதியைத் திருத்துவதற்காக கற்கள் பறிக்கப்பட்டு பலமாதகாலமாகியும் இதுவரை இவ்வீதி திருத்தப்படவில்லை என்று புகார் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வீதியை விரைவில் புனரமைப்புச் செய்துதருமாறு இப்பகுதி மக்கள் வலி.தென்மேற்கு பிரதேச சபையினிடம் கடிதமூலம் வேண்டுகோள்விடுத்துள்ளனர். (ம-135)

## நீர்ப்பாசன, விவசாயத் திட்ட அதிகாரிகள் இன்று வருகின்றனர்

வடக்குக் கிழக்கு நீர்ப்பாசன, விவசாயத் திட்டத்தைச் சேர்ந்த 4 பேர் கொண்ட குழுவொன்று நான்கு நாள் விஜயத்தை மேற்கொண்டு இன்று புதன்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளது.

இக்குழுவில் திட்டத்தின் தொழில்நுட்பப் பணிப்பாளர் எஸ்.மனோகரன், வடக்கு - கிழக்கு நீர்ப்பாசன விவசாயத் திட்டப் பணிப்பாளர் எஸ்.சர்வலோகநாதன், பங்கேற்பு நுண்கருத் திட்ட அபிவிருத்தி நிபுணர் எம்.ஜெகநாதன், திட்டத்தின் உதவிப் பணிப்பாளர் கே.பி.பத்மநாதன் ஆகியோரே இடம்பெற்றுள்ளனர்.

இக்குழுவினர் குடாநாட்டில் உள்ள குளங்கள் மற்றும் உவர்நீர்த் தடுப்பணைகள் ஆகியவற்றைப் பார்வையிட்டு அவற்றின் செயற்பாடுகள் தொடர்பான திட்டம் ஒன்றைத் தயாரிக்கவுள்ளனர். (க-10-8)

## 2 மாதங்களுக்குத் தேவையான மா 'ஹண்டி' கப்பலில் வந்தது!

குடாநாட்டு மக்களுக்குத் தேவையான கோதுமை மாவை ஏற்றிக் கொண்டு 'ஹண்டி' கப்பல் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வந்து சேர்ந்துள்ளது.

இக்கப்பலில் 3 ஆயிரம் மெற்றிக் தொன் மா எடுத்துவரப்பட்டுத் தற்பொழுது அதனை இறக்கும் பணிகள் இடம்பெற்றுவருவதாக யாழ.செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இநத 3 ஆயிரம் மெற்றிக் தொன் மாவும் குடாநாட்டு மக்களின் 2 மாத கால பாவனைக்குப் போதும் எனவும் இதன் மூலம் தற்பொழுது இங்கு நிலவுகின்ற தற்காலிகத் தட்டுப்பாடு நீங்கும் எனவும் அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (க-10)

## வீதியில் குப்பை கொட்டாதீர்! தொண்டு நிறுவனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.23

வீதியில் கண்டகண்ட இடங்களில் குப்பை கொட்டுவதைத் தவிர்த்து சூழலைத் துப்புரவாக வைத்திருக்க உதவுமாறு ஜி.ரி.இசட் எனப்படும் ஜேர்மன் தொண்டு நிறுவனம் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பான துண்டுப் பிரசுரமொன்றும் மேற்படி நிறுவனத்தினால் வெளியிடப்பட்டுள்ளது.

குறிப்பாக கண்டுக்குளிப்பகுதியில் மேற்படி அமைப்பின் யாழ்.மாவட்ட தலைமை அலுவலகம் அமைந்துள்ள சூழலைத் துப்புரவாகப் பேணும் தமதுதிட்டத்திற்கு ஒத்துழைப்பு வழங்குமாறு இந்நிறுவனம் அப்பகுதி குடியிருப்பாளர்களைக் கேட்டுள்ளது.

மேலும் இத்திட்டத்திற்கு உதவும் வகையில் குப்பைகளைச் சேகரித்து வைக்கும் ஒரு தொகை தகரக் கொள கலன்களையும் ஜி.ரி.இசட் அப்பகுதி குடியிருப்பாளர்களுக்கு வழங்கியுள்ளது. (ம-15)

கடந்த வருடத்தில்

## மந்திகையில் காய்ச்சலுக்கு 11 ஆயிரம் பேர் சிகிச்சை

தென்மராட்சி,ஜன.23

மந்திகை ஆஸ்பத்திரி வெளி நோயாளர் பிரிவில் கடந்த வருடம் (2001) 11ஆயிரம் பேர் காய்ச்சலுக்கான சிகிச்சை பெற்றுள்ளனர்.

ஆஸ்பத்திரி மலேரியா தடுப்புப் பிரிவில் காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர்களில் 10 ஆயிரத்து 999 பேரின் இரத்தம் பரிசோதனை செய்யப்பட்டதாகவும் இவர்களில் 302 பேர் மலேரியாக் காய்ச்சலினாலும் -

37 பேர் மூளை மலேரியாக் காய்ச்சலினாலும் -

பீடிக்கப்பட்டிருந்தமை கண்டு பிடிக்கப்பட்டிருந்ததாக மலேரியாத் தடுப்புப் பிரிவு புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன.

துன்னாலை, வல்லிபுரக்குறிச்சி, வடமராட்சி கிழக்கு ஆகிய பகுதிகளைச் சேர்ந்தோரே காய்ச்சலால் பெருமளவில் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

கடந்த சில தினங்களாக காய்ச்சலால் பீடிக்கப்பட்டு, சிகிச்சை பெறுவோரின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாகவும், கடந்த 15ஆம் திகதி ஒரு நாள் மட்டும் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட 155பேரின் இரத்தம் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-117)




கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலம் மீண்டும் இயங்கத் தொடங்கியுள்ளது. மாணவர்களின் வசதிகருதி கொடிகாமம் பொலீஸார் நேற்றுமுன்தினம் இப்பாடசாலைச் சூழலை சிரமதானப் பணி மூலம் துப்புரவு செய்தனர்.

சிரமதானப் பணியில் ஈடுபட்ட பொலீஸ் உத்தியோகத்தர்கள் அப்பகுதி பொதுமக்கள் மற்றும் பாடசாலைச் சமூகத்தினருடன் இணைந்து எடுத்துக்கொண்ட படம் இது. (ஐ-180)

## பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டதால் பயணிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.23

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் 750ஆம் இலக்க பாதையில் காலை 7.30 மணிக்கு பருத்தித்துறையில் இருந்து புறப்படும் பஸ் சேவை திடீரென நிறுத்தப்பட்டுள்ளதால், அரச, தனியார் ஊழியர்களும் மாணவர்களும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

ஏற்கனவே 'சீஸன் ரிக்கெட்' எடுத்தவர்களும் பஸ் சேவை நிறுத்தத்தால் பாதிப்படைந்துள்ளனர் என்றும் கூறப்படுகிறது.

ஊழியர்கள், மாணவர்களின் நன்மைகருதி காலை 7.30 மணிக்கான இந்தச் சேவையை மீண்டும் நடத்துமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (க)

## திருக்குறள் மனனப் போட்டி

வலிகாமம் தெற்கு,ஜன.23

வலிகாமம் கல்வி வலயத்தில் தரம் 4, தரம் 5 வகுப்புகளில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு இடையே திருக்குறள் மனனப்போட்டி கோட்ட மட்டம், வலய மட்டம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் நடைபெறும் போட்டியில் தெரிவுசெய்யப்படும் முதல் ஐந்து போட்டியாளர்கள் வலய மட்ட போட்டியில் பங்குபற்ற அனுமதிக்கப்படுவர்.

கோட்டமட்டப் போட்டிக்கான விண்ணப்பங்கள் இம்மாதம் 31ஆம் திகதி வரை ஏற்கப்பட்டு பெப்ரவரி 10ஆம் திகதிக்கு முன்னர் போட்டிகளை நடத்தி முடிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

வலயமட்டத்திலான போட்டி அடுத்த மாதம் 17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறும். (ம-152)

## கருத்தரங்கு

வலி.வடக்கு,ஜன.23

கந்தரோடை ஸ்கந்தவரோதயக் கல்லூரி முன்னாள் ஆசிரியர் அமரர் பண்டிதர் வ.நடராசா ஞாபகார்த்த நினைவுக் கல்விக் கருத்தரங்கு தொடர் மூன்று எதிர்வரும் 28ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணிக்கு உடுவில் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ.தற்பரானந்தன் தலைமையில் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

"விஞ்ஞானமும் தொழில்நுட்பமும் பாடத்தில் புதிய கற்றல் அணுகுமுறைகளின் வெற்றியும், பொதுத் தேர்வில் மாணவர்களது விடையளித்தல் நிலையும்" என்னும் விடயம்பற்றி யாழ்ப்பாணம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர்களான ச.இரவீந்திரநாதன், ஞா.இரத்தினசிங்கம் ஆகியோர் உரையாற்றவுள்ளனர்.

இந்தக் கலந்துரையாடலில் ஆர்வமுள்ள ஆசிரியர்களைக் கலந்து கொள்ளும்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-86)

☆ ☆ ☆

வலிகாமம் தெற்கு,ஜன23

'யுனிசெவ்' நிறுவன அனுசரணையுடன் வலிகாமம் கல்வி வலயப் பாடசாலைகளில் தரம் 6இற்கான மொழித்திறன் விருத்திச் செயற்றிட்ட கருத்தரங்கும் செயலமர்வும் எதிர்வரும் சனிக்கிழமை காலை வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

2002ஆம் ஆண்டு இச்செயற்றிட்டத்தை பாடசாலைகளில் நடைமுறைப்படுத்த உள்வாங்கப்பட்ட - தரம் 6இல் தமிழ்மொழி கற்பிக்கும் - ஆசிரியரை இக்கருத்தரங்கில் கலந்துகொள்ள அனுப்பிவைக்குமாறு பாடசாலை அதிபர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. (ம-152)

## வாக்காளர் இடாப்பு யாழ். செயலகத்தில் பார்வைக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.23

விரைவில் நடைபெறவுள்ள உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் வாக்களிக்கவுள்ள தபால்மூல வாக்காளர்களின் நன்மைகருதி வாக்காளர் இடாப்புகள் யாவும் இன்றுமுதல் யாழ்.செயலகத்தில் பார்வைக்கு வைக்கப்படும் என்று தேர்தல் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தபால்மூலம் வாக்களிக்க விரும்பும் வாக்காளர்கள் தமது விண்ணப்பங்களை அனுப்பிவைப்பதற்கு வசதியாகவே இடாப்பு பார்வைக்கு வைக்கப்படுகிறது. (க-10-8)

# நான்காம் ஆண்டு இதய அஞ்சலி




கப்டன் சுதா
**மாரிமுத்து சுதாகரன்**
எல்லை வீதி, ஆரையம்பதி,
காத்தான்குடி.
தாயின் மடியில் 14.03.1968
தாயக மண்ணில் 23.01.1998



லெப்டினன்ட் காளிதாஸ்
**மாணிக்கம் கேதீஸ்வரன்**
மாந்தை, திருக்கேதீஸ்வரம்,
மன்னார்.
தாயின் மடியில் 17.06.1969
தாயக மண்ணில் 23.01.1998



லெப்டினன்ட் நாதன்
**சிதம்பரம் சத்தியசீலன்**
கரிசல் சந்தி,
மன்னார்.
தாயின் மடியில் 12.04.1972
தாயக மண்ணில் 23.01.1998



உதவி லெப்டினன்ட் ஈசன்
**ரங்கசாமி குமார்**
3ஆம் வாய்க்கால், பரந்தன்,
கிளிநொச்சி.
தாயின் மடியில் 07.04.1965
தாயக மண்ணில் 23.01.1998

மக்களுக்காய் மக்கள் பணியில்
நின்ற எம் நவமணிகளே!
சோதரப் படுகொலையில் சுகம் காணும்
குருதி வெறியர்களின் கொலைக் கரங்கள்
உங்களைக் கொத்திக் குதறியதோ!
நீவீர் சிந்திய குருதி உங்கள் தியாகத்தை
எழுதும். மக்களின் மைந்தர்களே!
விதையாய் வீழ்ந்தீர்; விருட்சமாவோம்
தொடர்வோம் மக்கள் பணியில்!
விரைவோம் அவர் தம் விடுதலைக்காய்!



உதவி லெப்டினன்ட் கெனடி
**திருஞானசம்பந்தர் செந்தில்குமார்**
சுருவில், ஊர்காவற்றுறை.
தாயின் மடியில் 16.04.1965
தாயக மண்ணில் 23.01.1998



உதவி லெப்டினன்ட்
தவநேசன்
**ஆனந்தன் ஜெபநேசன்**
முருங்கன், மன்னார்.
தாயின் மடியில் 12.06.1972
தாயக மண்ணில் 23.01.1998



உதவி லெப்டினன்ட்
தெய்வேந்திரன்
**மாரிமுத்து ராசலிங்கம்**
யட்டிநுவர, கண்டி.
தாயின் மடியில் 04.01.1972
தாயக மண்ணில் 23.01.1998



உதவி லெப்டினன்ட்
சுதாராஜ்
**சண்முகராசா தவராசா**
தாவடி தெற்கு, கொக்குவில்.
தாயின் மடியில் 29.10.1969
தாயக மண்ணில் 23.01.1998



உதவி லெப்டினன்ட்
மேனன்
**செல்லையா தர்மராசா**
3ஆம் குறிச்சி, மண்டூர், மட்டக்களப்பு.
தாயின் மடியில் 08.06.1972
தாயக மண்ணில் 23.01.1998

## ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி

## ஈ.பி.டி.பி.

## யாழ். மாவட்டம்

(9425)

## அற்புத குழந்தை இயேசுவுக்கு

**நன்றி!**

அற்புத குழந்தை இயேசுவிடம்
மிக உருக்கமாக ஜெபித்து வேண்டியபோது
அவர் என் விண்ணப்பத்தைக் கேட்டருளினார்.
அந்த அற்புத குழந்தை இயேசுவுக்கு நன்றிகூறி நிற்கின்றேன்.

பண்டத்தரிப்பு. (97433) குழந்தை இயேசுவின் அடியாள்

## கணனி இயக்குநர் தேவை

**Computer TYPE SETTING, PAGE MAKING**

தெரிந்தவர்கள், அனுபவமுள்ளவர்கள் தேவை.
தகுதிக்கேற்ற தகுந்த வேதனம் வழங்கப்படும்.
27.01.2002 காலை 10 மணிக்கு நேரில் வரவும்.

**போஸ்கோ ஆட்ரோன் பிறின்டர்ஸ்.**
252, பருத்தித்துறை வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
(நல்லூர்க் கந்தசுவாமி கோயில் முன்பாக) (C/20435)

## விற்பனைக்கு

கீழ்க்காணும் பொருள்களை நுகர்வோரின் நன்மை கருதி மொத்தமாகவும், சில்லறையாகவும் எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம் என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.

எமது தரமான தயாரிப்புகள்:

☆ பூச்சிக்கொல்லி (எறும்புத்தூள்) ☆ குளோரின் (பிளீச்சிங் பவுடர்)
☆ தொற்றுத்தடை மருந்து (DISINFECTANT)

விநியோகஸ்தர்கள்:

**ஜெயந்தி என்ரப்பிறைசஸ** *(அரசபதிவு இல. 10880)*

உரிமையாளர்:- திரு. S.மகாதேவன்
*சந்தையடி ஒழுங்கை,*
*ஆவரங்கால், புத்தூர்.* (97434)

## துயர் பகிர்கிறோம்

எமது கல்லூரி ஆசிரியர்
திரு.க.ஸ்ரீகந்தவேள் அவர்களின்
அன்புத் தந்தையார்

**செ.கந்தையா** *(இளைப்பாறிய அதிபர்)*

அவர்களின் பிரிவு குறித்து துயருறும் குடும்பத்தினருக்கு எமது அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

*ஸ்கந்தவரோதயக் கல்லூரி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்* (97426) அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.

## ஓராண்டு நினைவுகளில்.....

**தயானந்தன் வாகீசன்**

ஈரவிழி காயவில்லை, ஓராண்டு சென்றதுவோ!
பாரமான இதயத்துடன் பாரினில் பரிதவிக்கின்றேன்
ஆறமுடியுமோ! அன்றில்போல் வாழ்ந்திருந்தோம்.
இதற்கு யாரொடு நோகேன் யார்க் கெடுத்துரைப்பேன்.

*ஆறுகால்மடம்.* (C/20437) திரு.ஜெயசுதன்

## முதலாம் ஆண்டு நினைவுதினம்



தோற்றம் 13 - 06 - 1978 மறைவு 03 - 02 - 2001

**தயானந்தன் வாகீசன்**

*(லக்ஸ்மி கொமினிகேசன் உரிமையாளர்)*

அன்புள்ளம் கொண்டவனே!
பாசத்தின் பிறப்பிடமே!
கருணையின் இருப்பிடமே - வாகீசா
உன்னைக் காலன் வாழ வேண்டிய வயதிலே
கவர்ந்து சென்று விட்டானே - வாகீசா
எம்மைவிட்டு பிரிந்து ஆண்டு ஒன்று
கடந்திட்ட போதிலும் உன் நினைவுடன்
வாழ்கின்றோம்!

இன்று (23-01-2002) புதன்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் பங்குகொள்ளும் வண்ணம் எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*புதுறோட்,*
*ஆறுகால்மடம்.* - குடும்பத்தினர்.

## கோப்பாய் கலாசாலை மாணவருக்கு!

யாழ்ப்பாணம்,ஜன.23

தற்சமயம் பாடசாலைகளில் கற்பித்தல் பயிற்சியில் ஈடுபட்டிருக்கும் சகல ஆசிரிய மாணவர்களையும், மேற்பார்வைக் கடமையில் உள்ள சகல விரிவுரையாளர்களையும் இன்று பிற்பகல் 2.00 மணிக்கு கலாசாலையில் சமுகமளிக்கும்படி கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

## விபத்தில் யுவதி படுகாயம்

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரிக்கு அருகில் வீதியைக் கடக்க முற்பட்ட யுவதி ஒருவர் வீதியால் வந்த மினிபஸ்ஸுக்குள் சிக்கி படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுப் பிற்பகல் 2மணியளவில் இடம்பெற்ற இந்த சம்பவத்தில் தொல்புரம் மத்தி சுழிபுரத்தைச் சேர்ந்த சண்முகநாதன் பிரபானந்தினி (வயது 25) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஐ-6)

## யாழ்.இந்து மாணவரின் பெற்றோருக்கு!

யாழ்.இந்துக் கல்லூரியில் ஜி.சீ.ஈ. (உயர்தரம்) - 2002 வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்களின் பெற்றோரை எதிர்வரும் வெள்ளிக்கிழமைக்கு முன்னர் கல்லூரியில் சமுகம் அளித்து பதிவேடுகளில் கையொப்பம் இடும்படி கல்லூரி அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

## கலைஞர்களை கௌரவிக்க ஏற்பாடு

நல்லூர் பிரதேச செயலக பிரிவுக்குள் வசிக்கும் மூத்த கலைஞர்களைக் கௌரவிக்க பிரதேச செயலக கலாசாரப் பேரவை ஏற்பாடு செய்துள்ளது.

இதற்கு வசதியாக மூத்த கலைஞர்களின் சுயவிவரங்களை எதிர்வரும் 28ஆம் திகதிக்கு முன்னர் பிரதேச சபை கலாசார உத்தியோகத்தருக்கு அனுப்புமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-86)


**சித்தி விநாயகர் கல்வி நிலையம்**
மல்லாகம்

☆ மாணவர்களே!
உங்கள் ஆங்கில
அறிவை பூர்த்தியாக்க
SPOKEN ENGLISH
with Grammar
ஆசிரியர்:- நிரோஜன்
புதிய பிரிவு:- 26. 01. 2002 சனி 5 மணி (C/20428)

**நாகம்ஸ்** சுன்னாகம்
நாளை மட்டும்
சரத்குமார், மீனா, பிரகாஷ்ராஜ்
நடித்த
**ரிஷி**
(ரீல்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00 (பு.நே.) (97428)

**ராஜா** யாழ்ப்பாணம்
இன்று முதல்
விஜயகாந், கனகா,
செந்தில்,கவுண்டமணி நடித்த
**கோயிற் காளை**
தினசரி: 10.30, 2.30 (புதிய நேரம்)
சனி, ஞாயிறு 10.30, 2.00, 5.00 (C/20092)

**லஷ்சுமி** இணுவில்
மம்முட்டி, முரளி, ரம்பா,
தேவயானி, அப்பாஸ நடித்த
**ஆனந்தம்** (ரீல்ஸ்)
தினசரி: 10.30, 2.30 (பு.நே.) (97442)

**நிறைஞ்சனாஸ்**
சங்கானை
விஜய், தேவயானி, ரம்பா
மற்றும் பலர் நடித்த
**நினைத்தேன் வந்தாய்**
(ரீல்ஸ்)
தினசரி: 11.00, 2.30, 5.30 (பு.நே.) (C-20408)


## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரி ஆசிரியர் திரு.க.ஸ்ரீநந்தகோபன் அவர்களின்
அன்புத் தந்தையார்

**செல்லையா கந்தையா**
*(ஓய்வுபெற்ற அதிபர்)*

அவர்கள் இயற்கையெய்தியமையையிட்டு துயருறும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரின் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள்,
(97427) *யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி.*

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி பு.சண்முகராஜா அவர்களினதும் முன்னாள் ஆசிரியர் திரு.க.கந்தவேள் அவர்களினதும் தந்தையார்

**அமரா செ.கந்தையா**

அவர்கள் காலமானதையிட்டு துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஆசிரியர் நல்லுறவு மன்றம்,
(97438) யா/மானிப்பாய் மெமோறியல்ஆங்கில பாடசாலை.

# மரண அறிவித்தல்கள்

## செல்லையா கந்தையா

(ஓய்வுபெற்ற அதிபர், சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலை)

சுதுமலை வடக்கைச் சேர்ந்த செல்லையா கந்தையா 20.01.2002 ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - செல்லாச்சி தம்பதியினரின் மூத்த மகனும் இணுவில் கிழக்கைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - செல்லம்மா தம்பதியினரின் மருமகனும் தங்கேஸ்வரியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர், இணுவில் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும் புவனேஸ்வரி (ஆசிரியர், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை), ஸ்ரீகணேசன் (யாழ்.பல்கலைக் கழகம் - வவுனியா வளாகம்), சோமேஸ்வரி (ஆசிரியர், சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), சித்தீஸ்வரி (சுவிஸ்), ஸ்ரீகந்தவேள் (ஆசிரியர், யூனியன் கல்லூரி, தெல்லிப்பழை - ஸ்கந்தவரோதயாக் கல்லூரி, சுன்னாகம்), சிவனேஸ்வரி (டென்மார்க்), ஸ்ரீகந்தகோபன் (ஆசிரியர், சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), அகிலாண்டேஸ்வரி (B.A. வெளிவாரி மாணவி), ஸ்ரீகருணாகரன் (மாணவன், யாழ். பல்கலைக்கழகம் கலைப்பீடம் முதலாம் வருடம்) ஆகியோரின் பாசமிகு தந்தையாரும் ந.சண்முகராஜா (துவாரகாஸ், பருத்தித்துறை), செல்வகுமாரி, ந.அமரசிங்கம் (முகாமையாளர் 'கின் றோஸ் இன்' கொழும்பு), அ.கதிர்காமநாதன் (சுவிஸ்), செல்வலட்சுமி (ஆசிரியர், தெல்லிப்பழை சைவப்பிரகாச வித்தியாலயம்), சி.சிவகுமார் (டென்மார்க்) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான நாகம்மா, செல்வரத்தினம் மற்றும் பரமேஸ்வரி, தியாகராஜா, சிவப்பிரகாசம், சின்னராஜா ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான சிதம்பரேஸ்வரி, இரத்தினம், கமலம் மற்றும் மீனாம்பாள், கயிலாயநாதன், மகேஸ்வரி ஆகியோரின் அன்பு மைத்துனரும் சாரங்கன், சரண்ஜா, துவாரகா, சாஜீசரன், சாஜீகரன், சஸ்மீரா, நதிஸ்கர், சஜீந்திரன் ஆகியோரின் பாசமிகு பேரனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை இன்று (23.01.2002) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு சுதுமலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.தங்கேஸ்வரி (மனைவி)
க.ஸ்ரீகந்தவேள் (மகன்)
இணுவில் கிழக்கு.

*சுதுமலை வடக்கு,*
*மானிப்பாய்.* (97443)

## திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை

கைதடி, நுணாவிலை வசிப்பிடமாகவும் சுழிபுரத்தை தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட திருமதி கந்தையா சிவகாமிப்பிள்ளை நேற்று (22.01.2002) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் பொன்னுத்துரையின் அன்பு மனைவியும் கனகரத்தினம், காலஞ்சென்ற அரியகுட்டி ஆகியோரின் சகோதரியும் இராசம்மா, கனகம்மா ஆகியோரின் மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.01.2002) செவ்வாய்க்கிழமை சுழிபுரம் கிழக்கில் நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*சுழிபுரம் கிழக்கு.* (97440) க.கனகரத்தினம்

## பொன்னுத்துரை மனமோகன் (சாந்தன்)

*(லங்கா சிமெந்து லிமிடெட், காங்கேசன்துறை)*

கொல்லங்கலட்டி, தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும், வரியப்புலம், சுன்னாகத்தினை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை மனமோகன் 20.01.2002 ஞாயிற்றுக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் பொன்னுத்துரை - சரஸ்வதி தம்பதியின் அன்பு மகனும் கலாநிதியின் அன்புக் கணவரும் அபிவர்ஷனி, பிரியங்கன், குகாங்கன் ஆகியோரின் அன்புத் தந்தையும் நடராசா (இளைப்பாறிய ஆசிரியர்), காலஞ்சென்ற சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும் மல்லிகாதேவி, மனோகரன் (தெல்லிப்பழை ப.நோ.கூட்டுறவுச் சங்கம்), Dr.மகாதேவன் (கால்நடை வைத்தியர், தெல்லிப்பழை), மகேந்திரன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் தயேந்திரன் (கனடா), அருள்ராஜா (கொழும்பு), இராசரத்தினம், ரதி, ஜெயமாலா (வலி.தெற்கு பிரதேச சபை, சுன்னாகம்), சுகுணாதேவி (லண்டன்) ஆகியோரின் மைத்துனரும் ரூபினி (கனடா), சுஜாதா (கொழும்பு) ஆகியோரின் ஒன்றுவிட்ட சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.01.2002) புதன்கிழமை பி.ப. 2.00மணி அளவில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோத்தியாலடி இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பெற்றோர், சகோதரர்கள்,
மனைவி, பிள்ளைகள்.

*வரியப்புலம்,*
*சுன்னாகம்.* (C/20436)

# அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்யுங்கள்!

## அரச அதிபரிடம் வர்த்தக சம்மேளனம் கோரிக்கை

யாழ்ப்பாணம்,ஜன.23

குடாநாட்டில் பொருள்களின் விலை யேற்றத்தைக் கட்டுப்படுத்த அத்தியாவசியப் பொருள்களுக்கு விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று அரச அதிபரைக் கோரும் தீர்மானம் ஒன்றை யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் நிறைவேற்றியுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற சம்மேளனத்தின் கூட்டத்திலேயே இத்தீர்மானம் நிறைவேற்றப் பட்டது.

அத்தியாவசியப் பொருள்களின் விலையுயர்வு, அடிக்கடி நடத்தப் படும ஹர்த்தால், கடையடைப்பு களால் ஏற்படும் பாதிப்பு என்பன தொடர்பாக இக் கூட்டத்தில் ஆராயபபட்டது.

கூட்டத்தில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு:-

.★ தற்போது நடத்தப்படும் ஹர்த்தால், கடையடைப்பு போன்ற நிகழ்வுகள எழுந்தமானமாக மேற்கொள்ளப் படுவதனால் வர்த்தக சமூகத்துக்குப் பாதிப்பு ஏற்படுகிறது. வர்த்தக சங்கங்களுக்கும் இக்கட்டான நிலை ஏற்படுகிறது. ஹர்த்தாலும் பூரணத்துவமாக நடந்து முடிவதில்லை. எனவே இனிவரும் காலங்களில் ஹர்த்தால் அனுஷ்டிக்க அழைப்பு விடுபவர்கள் ஹர்த்தால் நடைபெறும் நாளுக்கு ஒருகிழமைக்குமுன் (7நாள்கள்) யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனத்துக்கு எழுதது மூலம் அறியப்படுத்த வேண்டும். யாழ்.மாவட்ட வர்த்தக சங்கங்களின் சம்மேளனம் குடாநாட்டில் உள்ள ஏனைய வர்த்தக சங்க செயற்குழுக்களுடன் தொடர்புகொண்டு தீர்மானம் எடுத்தபின் கடையடைப் பிற்கான அறிவித்தலைப் பத்திரிகை மூலம் அறிவிக்கும். எமது சம்மேளனம் பக்கச்சார்பின்றிச் செயற்படுவதனால் கட்சி சார்ந்த ஹர்த்தால் மற்றும் கடையடைப்புக்கு இனிமேல் ஆதரவு அளிப்பதில்லை.

★நாளுக்கு நாள் பொருள்களின் விலை அதிகரித்து தற்போது உச்சக்கட்டத்தை அடைந்திருக்கிறது. இவ்விடயத்தை யாழ்.அரசாங்க அதிபர் கவனத்தில் கொள்ளவேண்டும். கப்பலில் பொருள்கள் கொண்டு வரும் பெரிய வர்த்தகர்கள் சிலரையும், யாழ்.மாவட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருள்களைக கொண்டுவரும் யாழ்.மாவட்ட விவசாய நுகர்ச்சி கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவரையும் அழைத்து கொழும்பில் பொருள்களின் விலையையும்,கொழும்பிலிருந்து பொருள்களை யாழ்ப்பாணம் கொண்டு வர ஏற்படும் செலவையும் ஆராய்ந்து அத்தியாவசியப் பொருளகளின விலையை நிர்ணயிக்கவேணடும். அதன்பின் அப்பொருள்களைக் கூட்டி விற்பவர்களுக்கு எதிராக ஏற்ற நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

★ வர்த்தகர்கள் போர்க்கால சூழ்நிலையையும், மக்கள் படும் இன்னல்களையும், கஷ்டங்களையும மறந்து பணம் ஒன்றே நோக்கமாகக் கொண்டு செயற்படுவது எமது மண்ணுக்கு நல்லதல்ல. வர்த்தகர்கள் சமூகத்தில் ஒரு கீழான நிலைக்கு கணிக்கப்படுமளவுக்கு செயற்பட வேண்டாமெனக் கேட்டுக்கொள்வதுடன் பொருள்களை நிதானவிலையில் விற்கவேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறோம். (ஐ-3)

## போதியளவு கையிருப்பில் இருந்தும்

# மண்எண்ணெயை விநியோகிக்க வழி இல்லை என்கிறார் அமைச்சர்

குடாநாட்டில் மண்எண்ணெய் போதியளவு கையிருப்பில் இருந்த போதும் உத்தரவு பெற்ற முகவர்களுக்கு அதை விநியோகிக்க முடியாமல் உள்ளது. இதற்கு ஐ.தே. கட்சி அரசு பொறுப்பல்ல.

இப்படிக் கூறியுள்ளார் இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன்.

குடாநாட்டு மண்எண்ணெய் விநியோகம் தொடர்பாக அவர் நேற்று விடுத்த அறிக்கை ஒன்றிலேயே இப்படித் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

காங்கேசன்துறையில் ஆறு லட்சத்து 80ஆயிரம் லீற்றர் மண்எணணெய் களஞ்சியப்படுத்தப்பட்டுள்ளது. அத்துடன் ஆயிரம் பரல்களில் 2லட்சம் லீற்றர் மண்எண்ணெயும் அங்கு உள்ளது.

ப.நோ.கூ.சங்கங்கள் ஊடாகவே மண்எண்ணெய் விநியோகிக்க வேணடும் என்று நீதிமன்றம் உத்தரவிட்டுளளது. இதன் காரணமாக அங்கீகரிக்கப்பட்ட தனியார் முகவர்களுக்கு மணஎண்ணெய் விநியோகம் செய்ய முடியாது உள்ளது.

மண்எண்ணெய் விநியோகம் சம்பந்தமாக அரசு எந்த முடிவையும் எடுக்க முடியாதுள்ளது. அத்துடன் தற்சமயம் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டு நிலைக்கு ஐ.தே.க. அரசோ, அரசின் பிரதிநிதியான நானோ பொறுப்பாளிகள் அல்லர் என்பதை குடாநாட்டு மக்களுக்குத் தெரிவிக்கவிரும்புகின்றோம் - என்றார்.

மின்சக்தி, வலு அமைச்சர் கரு ஜயசூரியாவுடன் நேற்று அமைச்சர் தி.மகேஸ்வரன் மண்எண்ணெய் விநியோகம் குறித்து கலந்துரையாடியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-3)

# உண்ணாவிரதப் போரில் குதிக்க யாழ்.சிறைக் கைதிகள் முஸ்தீபு?

யாழ்ப்பாணம்,ஜன.23

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் யாழ்.சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள கைதிகள் தம்மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்தி தம்மை விரைவிலேயே விடுவிக்குமாறு கோரி எதிர்வரும் பெப்ரவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் உண்ணாவிரதப் போராட்டதில் குதிக்கவுள்ளதாகத் தெரியவருகிறது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள இரண்டு பெண் கைதிகள் உட்பட சுமார் 24 கைதிகளே இவ்வாறு உண்ணாவிரதப்போரில் குதிக்கத் திட்டமிட்டிருப்பதாகத் தெரிகிறது.

யாழ்.சிறைச்சாலையில் தற்போது ஆறு இராணுவத்தினர் உட்பட சுமார் 191 பேர் தடுத்துவைக்கப்பட்டுள்ளனர்.

கைதிகளின் போராட்டம் குறித்து சிறைச்சாலை நிர்வாகத்துக்கு தகவல் எதுவும் அறிவிக்கப்படவில்லை என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. (ஐ-9)

# மார்ச் 20இல் தேர்தல்?

கொழும்பு,ஜன.23

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் எதிர்வரும் மார்ச் 20ஆம் திகதி நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இத்தேர்தல்களுக்கான வாக்காளர் அட்டைகள் ஏற்கனவே அரசாங்க அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டுள்ளன.

தேர்தல்கள் திட்டமிட்டபடி மார்ச் மாதத்தில் நடைபெறும். அவை எக்காரணம் கொண்டும் ஒத்திவைக்கப் படமாட்டா என்று உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி அமைச்சர் அலிக் அலுவிகார கூறுகிறார். (ஐ)

## ரத்னசிறியுடன் ரணில் பேசுவார்

விடுதலைப் புலிகளுடன் ஆரம்பிக்க உத்தேசித்துள்ள நேரடிப் பேச்சுத் தொடர்பாக பேச்சு நடத்த எதிர்க் கட்சித் தலைவர் ரத்னசிறி விக்கிரம நாயக்கவை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க அழைக்கவுள்ளார்.

நோர்வேயின் அனுசரணையுடன் விடுதலைப் புலிகளுடன் நேரடிப் பேச்சை ஆரம்பிக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் குறித்து அவரிடம் பிரதமர் விளக்கிக் கூறவிருக்கின்றார்.(ஐ-3)

# நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் திருடர் கோஷ்டி நடமாட்டம்

## அடுத்தடுத்து பல கடைகள் உடைப்பு

நல்லூர் சட்டநாதர் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள பலசரக்குக் கடையொன்று உடைக்கப்பட்டு அங்கிருந்த 15ஆயிரம் ரூபா பெறுமதியான பொருள்கள் சூறையாடப்பட்ட சம்பவம் ஞாயிறு இரவு இடம்பெற்றுள்ளது.

திருடர்கள் முன் கதவை உடைத்து புகுந்து கடையின் முன்அறையில் இருந்த அப்பியாசக் கொப்பிகள், சவர்க்கார வகைகள் போன்றவற்றை அள்ளிச்சென்றுள்ளனர்.

2000ஆம் ஆண்டுமுதல் இதுவரை இந்தக்கடை 3தடவைகள் திருடர்களின் கைவரிசைக்கு இலக்காகியது

இதேவேளை -

கடந்த சனிக்கிழமை இரவு திருநெல்வேலி பழம் சந்தியில் கோப்பாய் பொலீஸ் நிலையத்துக்கு அணமையில் உள்ள பலசரக்குக் கடையொன்றும் உடைக்கப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான பொருளகள் அபகரிக்கப்பட்டுள்ளன. கல்வியங்காடு பொதுச் சந்தையில் உள்ள கடைகளிலும் அண்மையில் பொருள்கள் அபகரிக்கப்பட்டன.

நல்லூர், கல்வியங்காடு பகுதிகளில் இரவு ஊரடங்கு நேரத்தில் திருடர்கள் கோஷ்டி ஒன்று சுதந்திரமாக நடமாடி திருட்டுக்களில் ஈடுபட்டுவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தலையைக் கறுப்புத் துணியால் மூடிக்கட்டிய நிலையில் கும்பல் ஒன்று திருடப்பட்ட பொருள்களுடன் இரவுவேளை வீதிகளில் நடமாடுவதைக் கண்டதாக இப்பகுதி வாசிகள் தெரிவித்துள்ளனர். (ஐ-180)

# புலிகள் மீதான தடை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுக்களைத் தொடங்குமாறு சர்வதேச சமூகம் கூறுகிறது.

உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடையை நீக்குவதன் மூலம் சர்வதேச ரீதியில் காணப்படும் ஒத்துழைப்பை இழந்து விடுவதா என்ற கருத்துப் பற்றி நாம் ஆழமாகச் சிந்திக்க வேண்டும். சர்வதேச சமூகத்தின் ஒத்துழைப்பைக் கைவிடுவது என்பது விடுதலைப் புலிகளின் நோக்கங்களுக்கு வழி அமைத்துக் கொடுக்கும் நடவடிக்கையாகவே நான் கருதுகிறேன். ஆனாலும் சமாதானத்துக்குக் கிடைத்துள்ள இந்தக் கடைசிச் சந்தர்ப்பத்தை ஒரு போதும் கைவிடக்கூடாது.

விடுதலைப் புலிகள் இயக்கம் மீது விதிக்கப்பட்டிருக்கும் சர்வதேச மற்றும் உள்நாட்டுத் தடைகள் குறித்து நாம் அனைவரும் இந்தப் பின்னணியில் ஆழமாகச் சிந்திக்க வேண்டும்.

இங்கு இரு முக்கிய விடயங்களைக் கவனத்தில் எடுக்க வேண்டி உள்ளது. அரசியல் பேச்சுக்கள் தொடர்பாக விடுதலைப் புலிகள் காட்டும் நேர்மையின் உத்தரவாதம் அதில் முதலாவதாகும். உள்நாட்டில் எடுக்கப்படும் நடவடிக்கைகள் மூலம் வெளிநாடுகளில் விதிக்கப்பட்டிருக்கும் தடைகளுக்கு மோசமான தாக்கங்கள் ஏற்படாமல் இருப்பது இரண்டாவது ஆகும். இந்தக் காரணிகளின் அடிப்படையில் உருவான 'பாதுகாப்பு வலை' என்ற காப்பின் மூலம் உள்நாட்டில் விதிக்கப்பட்டிருக்கும் தடைப் பிரமாணங்களில் திருத்தங்களைக் கொண்டுவந்து சர்வதேச கருத்துக்களைப் பேணிப் பாதுகாத்து முன்னேறிச் செல்வது எம்மிடம் இருக்கும் ஒரு மாற்று வழியாகும்.

நாம் சமாதானத்திற்காக எம்மை நேர்மையாகவே அர்ப்பணிக்கின்றோம். ஆனாலும் ஆரம்பக் கட்டங்களில் விடுதலைப் புலிகள் தொடர்பாக எமது மத்தியில் சந்தேகம் நிலவுவதும், அரசாங்கத்தை விடுதலைப் புலிகள் சந்தேகிப்பதும் இயற்கையான நிலைமைதான் என நாம் கருதுகின்றோம். இத்தகைய பின்னணியில் படைகளை உஷார் நிலையில் வைத்திருப்பது சாதுரியமான செயலாகும் என்றே நான் எண்ணுகிறேன். இருந்தாலும் இரு தரப்பினருக்கும் மத்தியில் பரஸ்பர புரிந்துணர்வு உருவாகுவதோடு இந்த நிலைமை பெரிதும் மாற்றமடையக் கூடும்.

### யுத்தத்தால் தீர்வு காணமுடியாது

வடக்கு - கிழக்கு போர்க்களத்தின் மூலம் யுத்தத்திற்குத் தீர்வு காண முடியாத காரணத்தால் தற்போது நாம் சர்வதேச கருத்துக்களை நோக்கித் திரும்ப நேரிட்டுள்ளது.

இந்தியாவும், எமக்கு உதவி செய்யும் நாடுகளும் முன்னரை விட தற்போது இந்த நெருக்கடி பற்றி அதிகமாகக் கவனம் செலுத்தியுள்ளன. யுத்தத்திற்கு அரசியல் ரீதியான தீர்வு ஒன்றே அவசியம் என்பது அவற்றின் உறுதியான நிலைப்பாடாகக் காணப்படுகின்றது. அந்த நிலைப்பாட்டின் மத்தியில் இன்று யுத்தத்தின் கேந்திர ஸ்தலமாக அமைந்திருப்பது சர்வதேச கருத்துக்களாகும்.

சர்வதேச கண்ணோட்டங்களின் அடிப்படையிலேயே வடக்கு - கிழக்கு யுத்தத்திற்குத் தீர்வு காண முடியும் என்பதால் நாம் அது பற்றிக் கவனம் செலுத்த வேண்டும். இத்தகைய பின்னணியில் சர்வதேச கருத்துக்களை வெல்ல முடியுமானால் இலங்கையின் ஆட்புல ஒருமைப்பாட்டையும் ஐக்கியத்தையும் பேணிப் பாதுகாக்கக்கூடிய வாய்ப்பு ,எமக்குக் கிடைக்கும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் நாம் அனைவரும் ஒரே நோக்கத்தோடு செயற்படுவோமானால், அது ஒரு தேசம் என்ற வகையில் சர்வதேச கருத்துக்களை அணிதிரட்டுவதற்கு விசேட பலமாக அமையும் என்பதில் சந்தேகம் இல்லை. அதனை விடுத்து குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக வேறுபட்டு நின்றோமானால் சர்வதேச கருத்துக்களுக்கு முன்னிலையில் நாம் தோல்வி அடைந்தவர்களாக மாறிவிடுவோம்.

இன்று சர்வதேச கருத்துக்கள் பயங்கரவாதம், யுத்தம் என்பனவற்றுக்கு எதிரானவையாக காணப்படுகின்றன. யுத்தத்திற்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டும் என்ற நிலைப்பாட்டை அவை எடுத்துள்ளன. வடக்கு - கிழக்கு நெருக்கடிகளுக்கு அரசியல் தீர்வு காண்பதற்காக ஒரு மத்தியஸ்தராகச் செயற்படுமாறு இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் நோர்வே அரசாங்கத்திற்கு விடுத்த அழைப்பிற்கு இணங்க எமது அரசாங்கமும் அந்த நிலைப்பாட்டையே எடுத்துள்ளது - என்று பிரதமர் தெரிவித்தார். (ஐ-3-6)

# களுத்துறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்படுதல், அரசதரப்பு சாட்சிகள் வழக்கு தவணைகளுக்கு சமுகம் தராமை, சட்டவைத்திய அதிகாரிகள் அறிக்கையை சமர்ப்பிக்க காலம் தாழ்த்துவது, பெரும்பாலான நீதிமன்றங்களில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கப்படாமை போன்ற காரணங்களால் தமிழ் அரசியல் கைதிகளின் விடுதலை தாமதமாகிறது.

தொடரும் எமது அவலநிலைகளை கருத்தில் கொண்டு மனிதாபிமான அடிப்படையில் சமாதான சூழல ஏற்படுகின்ற இக்கால கட்டத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி எங்களை துரிதமாக விடுதலை செய்து எங்கள் குடும்பத்தினருடன் நாங்கள் வாழ்வதற்கு வழியமைத்து தருமாறு வேண்டுகிறோம்.

தங்கள் நூறுநாள் திட்டத்தினுள் நாங்கள் அனைவரும் விடுதலையாகி விடுவோம் என்ற நம்பிக்கையுடன் காத திருக்கிறோம் - என்று அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த 7வருங்களுக்கு முதல் 1995-4-19ல் கைது செய்யப்பட்ட தம்பிப்பிள்ளை மேகநாதன், 1996-2-9 இல் கைது செய்யப்பட்ட வீராசாமி லோகநாதன் ஆகியோரும் இக்கைதிகளில் அடங்கியுள்ளனர். இவர்களில பலர் எந்தவித நீதிமன்ற விசாரணைகள் இன்றி தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (ஐ)


324,பலாலி வீதி, யாழ்ப்பாணம்

ஐ.நா.அபிவிருத்தித்திட்டத்தின்கீழ் அரச திணைக்களங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப் பயிற்சித்திட்டம் ஒன்றை முன் வைத்துள்ளனர்



பதிவுகள் ஜனவரி25 இற்குமுன்

இலவசக்கணனிப்பயிற்சி

IIS இன் விசேட அறிமுகம்

Technician Diploma in Radio, TV, Computer and Electronic Equipment Servicing

Syllabus Includes:

- Electronic Component Study
- Professional Circuit Study
- Related Trouble Shooting Study
- Computer Hardware Repairs

Based on City & Guilds - U.K Fully Practical Oriented

காலம் 8 மாதங்கள்

ஆரம்பம் 28-01-2002 மாலை 3 மணி

மேலதிக விபரங்களுக்கு Director, IIS - Jaffna

வீடியோ படப்பிடிப்பாளர்களுக்கான புதிய இயற்கைக் காட்சி வீடியோ CDக்கள்:

Natural Vol - 05
Vol - 21
Vol - 22
Vol - 23

வீடியோ விமல் யாழ்ப்பாணம். (C/20434)

கணக்கீடு A/L 2004 S.தவா B.Com.(Hons) (Acc.Spl.)

ஆரம்பம்: நாளை 5p.m.

வழமையான நேரம் செவ்., வியா. 5p.m.

SHAM ROCK Temple Rd, Jaffna. (C/20432)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.01.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.